# இராஜபாளையம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2023-2024

## I.அமைப்பும் நிர்வாகமும்

### 1. எல்லை:

அ) இந்நகராட்சி 01.10.1941 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக 38641 மக்கள் தொகையுடன் அமைக்கப்பட்டது. இதன் எல்லைக்குள் இராஜபாளையம், இனாம் செட்டிகுளம், சம்மந்தபுரம், வடக்கு வெங்காநல்லூர், புதுப்பாளையம் இனாம் தோப்புபட்டி, சமுசிகாபுரம், கொத்தன்குளம் கிராமத்தில் ஒரு பகுதி ஆகிய கிராமங்கள் அடங்கி உள்ளன. இந்நகர் 9' 03 அட்ச ரேகையிலும் 77' 39' தீர்க்க ரேகையிலும் கடல் மட்டத்தில் இருந்து 167.64 மீட்டரிலும் அமைந்துள்ளது. இந்நகரின் பரப்பளவு 11.36 ச.கிலோ மீட்டர் ஆகும்.

ஆ) இந்நகராட்சி 01.04.1955 முதல் இரண்டாம் நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டது. ஊரக வள ர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண் 2552 நாள் 02.12.1974ல் 01.04.1975 முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. பின்பு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் 1073 நாள் 14.12.1989ன்படி தேர்வு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இறுதியாக அரசாணை எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 02.12.2008 முதல் சிறப்பு நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. இந்நகரம் பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தில் 13.06.1951 முதல் தொழில் நகரமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. நகர் எல்லையில் மாறுதல் ஏதும் இல்லை.

இ)2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த தொகை 130442 ஆகும், இதில் ஆண் 64763 பெண் 65677 இதர பிரிவினர் 2 ஆகும். தற்போது இந்நகர் விருதுநகர் மாவட்டத்தில் அதிக மக்கள் தொகை உள்ள நகரமாக திகழ்கிறது.

ஈ) இந்நகராட்சி மண்டலகளாக இன்னும் பிரிக்கப்படவில்லை.

### 2.நிர்வாகம் :

அ)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் 135 நாள் 11.06.1996ல் இந்நகராட்சி 42 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நகர் மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 42 அவை கீழே குறிப்பிட்டுவாறு உள்ளது.

| | |
|---|---|
| a) பொது ஆண்கள் : 18 (வார்டு எண்) | 1,7,9,12,18,19,21,23,30,32,33,35,36,37,39,41,42 |
| பெண்கள் : 18 (வார்டு எண்) | 4,5,6,8,11,13,14,16,17,20,22,24,27,28,29,31,34,38 |
| b) ஆதி திராவிடர் பழங்குடியினர் | |
| ஆண்கள்:3 (வார்டு எண்) (பொது) | 3,25,26 |
| பெண்கள் :3 (வார்டு எண்) | 2,10,15 |
| காலியிடம் வார்டு | 41 |
| மொத்தம் | 42 |

அறிக்கை ஆண்டில் 01.04.2023 முதல் 31.03.2024 வரை நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள் அடங்கிய நகர்மன்றம் செயல்பட்டு வருகிறது.

| நகர்மன்ற தலைவர் | | |
|---|---|---|
| 1 | வார்டு – 6 | திருமதி. எ.அ.சு. பவித்ரா ஷ்யாம் |
| நகர்மன்ற துணைத்தலைவர் | | |
| 2 | வார்டு – 32 | திருமதி. கு.கல்பனா |
| நகர் மன்ற உறுப்பினர்கள் | | |
| வ. எண். | வார்டு எண். | நகர் மன்ற உறுப்பினர் பெயர் |
| 3 | வார்டு – 1 | திரு.எ.த.சங்கர்கணேஷ் |
| 4 | வார்டு – 2 | திருமதி. கோ.அழகுலெட்சுமி |
| 5 | வார்டு – 3 | திரு. ரா. சுரேஷ் குமார் |
| 6 | வார்டு – 4 | திருமதி. கா. மீனாட்சி |
| 7 | வார்டு – 5 | திருமதி. மு .வள்ளி |
| 8 | வார்டு – 7 | திரு. கோ.வைரமுத்து |
| 9 | வார்டு – 8 | திருமதி. க.இந்துமதி |
| 10 | வார்டு – 9 | திரு. தி . முகமது ரபீக் |
| 11 | வார்டு – 10 | திருமதி. ரா. மாலா |
| 12 | வார்டு – 11 | திருமதி. எ. சபீனா பேகம் |
| 13 | வார்டு – 12 | திரு. வே . திருமலைக்குமார் |
| 14 | வார்டு – 13 | திருமதி. ச. ஷாலினி |
| 15 | வார்டு – 14 | திருமதி. ரா . அர்ச்சனா |
| 16 | வார்டு – 15 | திருமதி. சி. இராணிபாலா தேவி |
| 17 | வார்டு – 16 | திருமதி. பா.ஜெயசுதா |
| 18 | வார்டு – 17 | திருமதி. வெ. ஜெகதீஸ்வரி |
| 19 | வார்டு – 18 | திரு. ச.சோலைமலை |
| 20 | வார்டு – 19 | திரு. வி.பி. செந்தில்குமார் |
| 21 | வார்டு – 20 | திருமதி. செ.பாலசுந்தரி |
| 22 | வார்டு – 21 | திரு. மா.ஞானவேல் |
| 23 | வார்டு – 22 | திருமதி. நா.ரோகிணி |
| 24 | வார்டு – 23 | திரு. மா.குருசாமி |
| 25 | வார்டு – 24 | திருமதி. பி. செல்வலெட்சுமி |
| 26 | வார்டு – 25 | திருமதி. க.சுப்புலட்சுமி |
| 27 | வார்டு – 26 | திரு. அ.மாரியப்பன் |
| 28 | வார்டு – 27 | திருமதி. பா.சுமதி |

| | | |
|---|---|---|
| 29 | வார்டு – 28 | திருமதி. கா. ராமலட்சுமி |
| 30 | வார்டு – 29 | திருமதி. இரா.கீதா |
| 31 | வார்டு – 30 | திரு. இரா.இராதாகிருஷ்ணராஜா |
| 32 | வார்டு – 31 | திருமதி. பா. ராதா |
| 33 | வார்டு – 33 | திரு. க.அருள்உதயம் |
| 34 | வார்டு – 34 | திருமதி வெ .புஷ்பம் |
| 35 | வார்டு – 35 | திரு. ரா. சங்கர் கணேஷ் |
| 36 | வார்டு – 36 | திரு. கோ.ரா.கோபிநாத் |
| 37 | வார்டு – 37 | திரு. பீ கார்த்திக் |
| 38 | வார்டு – 38 | திருமதி. ம . வீரலட்சுமி |
| 39 | வார்டு – 39 | திரு. ப.ஜான்கென்னடி |
| 40 | வார்டு – 40 | 01-04-2022 முதல் 26-08-2022 வரை .காலியிடம். |
| | வார்டு – 40 | 27-08-2022 முதல் 31-03-2023 வரை காலியிடம். |
| 41 | வார்டு – 41 | திரு. பொ.ராஜ் |
| 42 | வார்டு – 42 | திரு. சு .சீனிவாசன் |

அறிக்கையாண்டில் பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | | காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | முடிய |
| 1 | சோ.பார்த்தசாரதி | ஆணையாளர் | 01.04.2023 | 17.10.2023 |
| 2 | சே.நாகராஜன் | ஆணையாளர் | 18.10.2023 | 31.03.2024 |
| 3 | திரு.மு.இரத்தினவேல் | பொறியாளர் | 01.04.2023 | 31.07.2023 |
| 4 | திரு.மு.ஷே.முகம்மது ஷரீப் | செயற்பொறியாளர் | 01.08.2023 | 31.03.2024 |
| 5 | திரு.எஸ்.மகேஸ்வரன் | மேலாளர் | 01.04.2023 | 22.08.2023 |
| 6 | மு.முத்துசெல்வம் | மேலாளர் (பொ) | 23.08.2023 | 31.03.2024 |
| 7 | பி.மதியழகன் | நகர திட்டமிடுநர் | 01.04.2023 | 23.02.2024 |
| 8 | மு.முத்துசெல்வம் | வருவாய் அலுவலர் | 01.04.2023 | 31.03.2024 |
| 9 | அ.காளியம்மாள் | கணக்கர் | 01.04.2023 | 31.07.2023 |
| 10 | திரு.வெங்கடசுப்பிரமணியன் | கணக்கர் (பொ) | 01.08.2023 | 08.10.2023 |
| 11 | திரு.பகவதிராஜ் | கணக்கர் (பொ) | 17.10.2023 | 25.02.2024 |
| 12 | திருமதி.ஆ.மல்லிகா | கணக்கர் | 26.02.2024 | 31.03.2024 |

**4.மன்றக் கூட்டங்கள்:**

அறிக்கையாண்டில் மாதந்தோறும் ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டங்கள் நடைபெற்றன.

| கூட்டங்கள் | கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரணக்கூட்டம் | 4 | 629 |
| அவசரக்கூட்டம் | 4 | |
| சிறப்புக்கூட்டம் | 1 | |
| மொத்தம் | 9 | |
| கூட்டங்கள் | கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
| ஒப்பந்தக்குழு | - | - |
| நியமனக்குழு | 1 | 2 |
| வரிவிதிப்பு மேல்முறையீடு மற்றும் நிதி குழு | - | - |

**5.மேலாண்மை:**

அறிக்கை ஆண்டில் பணியாளர்கள் ஊதியத்திற்கு ரூ2256.34 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. **பணியிட விவரம்**: 01-04-2023 **முதல்** 31-03- 2024 **வரை.**

| வ.எண் | பதவின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மேலாளர் (வகுப்பு I) | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல்முறை ஆணை எண் 40082/88/கே1 நாள் 26.08.89 | 1 |
| 2 | கணக்கர் (வகுப்பு IA) | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல்முறை ஆணை எண் D.Dis 4000/79 | 1 |
| 3 | உதவியாளர் | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல்முறை ஆணை எண் D.Dis 11876/63<1 | 5 |
| 4 | இளநிலை உதவியாளர் | நகராட்சி ஆய்வர் ஆணை எண் 93511ஃ62 IMS Proc No L. Dis 4688/62 நாள் 07.04.68 | 10 |
| 5 | தட்டச்சர் | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல்முறை ஆணை எண் 4000.79 | 4 |
| ஆ 1 | வருவாய் அலுவலர் (வகுப்பு IA) | நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க. K.Dis 29822/89 நாள் 02.05.89 | 1 |
| 2 | வருவாய் ஆய்வாளர்கள் | நகராட்சி ஆய்வாளர் சென்னை-1, ந.க.எண் 13501/48 நாள் 13.05.48<br>நகராட்சி ஆய்வாளர் சென்னை-1, ப.மு.42104/49 நாள் 09.08.49 | 1<br>1 |
| 3 | வருவாய் உதவியாளர்கள் | நகராட்சி ஆய்வர், சென்னை 88673/73 நாள் 10.10.74 | 12 |
| 4 | அலுவலக உதவியாளர்கள் | நகராட்சி ஆய்வாளர் செயல்முறை ஆணை எண் 13642/62 நாள் 13.01.62 | 4 |
| இ 1 | கனிணி உதவி திட்ட அமைப்பாளர் | நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை -5 ஆணை எண் 19543/98/OP1 நாள் 16.06.99 | 1 |
| 2 | கனிணி புள்ளி விபரக் குறிப்பாளர் | நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை -5 ஆணை எண் 37383/99/OP1 நாள் 21.12.99 | 0 |

எனினும் அறிக்கை ஆண்டில் அரசாணை (நிலை) எண்**:10,** நாள்**:23–01–2023–**ன்படி சிறப்பு நிலை நகராட்சியான இராஜபாளையம் நகராட்சிக்கு பின்வருமாறு பணியிடங்கள் வரையறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**<u>பொதுப்பிரிவு</u>**

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேலாளர் வகுப்பு I | 1 |
| 2 | வருவாய் அலுவலர் வகுப்பு I A | 1 |
| 3 | கணக்கர் I A | 1 |
| 4 | வருவாய் ஆய்வாளர் வகுப்பு V | 2 |
| 5 | உதவியாளர் வகுப்பு V | 5 |
| 6 | இளநிலை உதவியாளர் வகுப்பு VII | 10 |

| | | |
|---|---|---|
| 7 | தட்டச்சர் | 4 |
| 8 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 9 | வருவாய் உதவியாளர் | 12 |
| 10 | பதிவறை எழுத்தர் | 1 |
| 11 | அலுவலக உதவியாளர் | 4 |

**<u>கணிணிப்பிரிவு</u>**

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கனிணி உதவி திட்ட அமைப்பாளர் | 1 |

அறிக்கையாண்டில் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் ஊதியச் செலவு ரூ.2256.34 லட்சமாகும். ஒய்வு பெற்ற அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர் அவர்களால் 01.10.04 முதல் அரசால் நகராட்சிகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் மாநில நிதிக் குழு நிதியில் பிடித்தம் செய்து அதிலிருந்து ஒய்வு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் பிரயாணப்படி செலவு ரூ.2.47 லட்சமாகும். அறிக்கையாண்டில் விளம்பர செலவு ரூ.4.91 லட்சம் ஆகும். தபால் செலவு ரூ.0.84 லட்சம் ஆகும். அறிக்கையாண்டில் தொலைபேசி கட்டணம் ரூ.4.60 லட்சம் ஆகும். எழுதுபொருள் மற்றும் அச்சடித்த வகைக்கு ரூ.46.97 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. கனிணி பராமரிப்பு செலவு 1.21 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**<u>6.வழக்குகள்:</u>**

அறிக்கையாண்டில் வழக்கு செலவு ரூ.2.39 லட்சம் ஆகும் அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை 68 புதிதாக தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 4 அறிக்கையாண்டில் முடிவு செய்யப்பட்டவை 6 ஆண்டுயிறுதியில் நிலுவை வழக்குகளின் எண்ணிக்கை 66 ஆகும்.

நிர்வாக செலவின விவரங்கள். (ரூ.லட்சத்தில்)

| வ.எண். | விவரம். | செலவு |
|---|---|---|
| 1 | அனைத்து பணியாளர்களுக்கு ஊதிய செலவு | 2476.34 |
| 2 | பிரயாண செலவு | 2.47 |
| 3 | கணினி பராமரிப்பு | 1.21 |
| 4 | விளம்பர செலவு | 4.91 |
| 5 | தபால் செலவு | 0.84 |
| 6 | தொலைபேசி கட்டணம் | 4.609 |
| 7 | எழுது பொருட்கள் - அச்சத்தமைக்கான செலவு | 46.97 |
| 8 | வழக்கு செலவு | 2.39 |

**<u>7.பொறியியல் பிரிவு பணியிடங்கள்:</u>**

இந்நகராட்சியில் பொறியியல் பணியின் கீழ் நகராட்சி பொறியாளர் நிலை 1 பணியிடம் ஓன்று – சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் செயல்முறை ஆணை எண் 50556/97/எப்3 நாள் 20.10.97 தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பொறியாளர் சார் நிலை பணியின் கீழ் கீழ்க்காணும் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

01-04-2023 **முதல்** 31-04-2024 **வரை**.

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உதவி பொறியாளர் | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1906 நாள் 28.08.62 | 3 |
| 2 | குடிநீர் பணி மேற்பார்வையாளர் | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 32 நாள் 06.01.79 | 3 |
| 3 | குழாய் பொருத்துநர் நிலை 1 | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1972 நாள் 22.12.78 | 1 |
| 4 | ஓட்டுநர் (சாலை உருளை) | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 814 நாள் 18.04.67 | 1 |
| 5 | ஓட்டுநர் (லாரி) | நகராட்சி ஆய்வர் சென்னை-1 செயல்முறை ஆணை எண் ஓ,மு 20037/79 நாள் 13.03.1979<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை-5 செயல்முறை ஆணை எண் ந.க.32105/97/ஜே3 நாள் 18.11.97 | 1<br>2 |
| 6 | ஓட்டுநர்(ஜீப்) | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1035 நாள் 03.06.81 | 1 |
| 7 | ஓட்டுநர்(டிராக்டர்) | நகராட்சி ஆய்வாளர், சென்னை-1 செயல்முறை ஆணை எண் மூ,மு 70065/80 நாள் 20.03.80<br>நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை-5 செயல்முறை ஆணை எண் மூ.மு.20431/82/எப்1 நாள் 03.04.82 | 1<br>1 |
| 8 | மின் கம்பியாளர் | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 230 நாள் 11.03.88 | 4 |
| 9 | பணி ஆய்வர் | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1906 நாள் 28.08.62 | 5 |
| 10 | தெரு விளக்கு உதவியாளர் (மின்பணி) | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 112 நாள் 21.02.90<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்70 நாள் | 4<br>1 |
| 11 | காவலர் (பூங்கா) | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல்முறை ஆணை எண் வ.மு.6398/65 நாள் 02.02.65 | 3 |
| 12 | காவலர் (தலைமை நீரேற்று நிலையம்) | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல்முறை ஆணை எண் மூ.மு.3,426/82 நாள் 03.04.82 | 3 |
| 13 | குழாய் திருப்புநர் | நகராட்சிகளின் ஆய்வாளர், சென்னை செயல்முறை ஆணை எண் 20012/79 நாள் 03.03.79 | 2 |
| 14 | சாலை உருளை துலக்குநர் | | 1 |
| 15 | கேங்கூலி | | 3 |

அறிக்கையாண்டில் பொறியியல் துறையில் குடிநீர் பணியாளர்கள் ஊதியச் செலவு சென்ற ஆண்டு ரூ.109.53 லட்சமாகும்.

எனினும் அறிக்கை ஆண்டில் அரசாணை ( நிலை ) எண்:**10**, நாள்:**23–01–2023–**ன்படி சிறப்பு நிலை நகராட்சியான இராஜபாளையம் நகராட்சிக்கு பின்வருமாறு பணியிடங்கள் வரையறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**பொறியியல் பிரிவு**

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் (நிலை 1- செயற்பொறியாளர்) | 1 |
| 2 | உதவி பொறியாளர்/ இளநிலைப்பொறியாளர் | 3 |
| 3 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 3 |
| 4 | பட வரைவாளர் நிலை III | 1 |
| 5 | பணி ஆய்வாளர் | 5 |
| 6 | மின் கண்காணிப்பாளர் நிலை I | 1 |
| 7 | மின்பணியாளர் நிலை I | 1 |
| 8 | குழாய் பொருத்துநர் நிலை I | 1 |
| 9 | மின் கம்பி பணியாளர் | 1 |

**8.சாலைகள் / பாலங்கள் / படகுத்துறைகள் மற்றும் கட்டிடங்கள்:**

**அ)சாலைகள்**

**இந்நகராட்சியின் சாலைகள் விபரம் பின்வருமாறு**

| சாலைகளின் தன்மை | 01.04.2021 அன்று சாலைகளின் நீளம் | கூடுதல் | மாற்றம் | 31.03.2024 அன்று சாலைகளின் நீளம் |
|---|---|---|---|---|
| சிமிண்ட் தளம் | 45.06 | - | - | 45.06 |
| தார் தளம் | 74.52 | - | - | 74.10 |
| பேவர் சாலை | 26.90 | - | - | 26.90 |
| மண் சாலை | 3.84 | - | - | 4.87 |
| மற்றவை | - | - | - | - |
| மொத்தம் | 151.51 | - | - | 150.94 |

அறிக்கையாண்டில் வண்டி வாகனாதி வரி மூலம் வரவு இல்லை. சாலைகளின் பராமரிப்பு செலவு ஏதுமில்லை. சென்ற ஆண்டு சாலை பராமரிப்பு செலவு ஏதும் இல்லை. 5.00 கி.மீ நீளமுள்ள தென்காசி சாலை தேசிய நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்படுகிறது. 2.10 கி.மீ நீளமுள்ள முடங்கியார் ரோடு மாவட்ட நிர்வாகத்தால் பராமரிக்கப்படுகிறது. சாலைகள் அமைக்கத் தேவையான சரல்கள் 9.00 கி.மீ தொலைவிலுள்ள கொல்லங்கொண்டான் என்ற கிராமத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. நகராட்சிக்குச் சொந்தமான கல் தோண்டி எடுக்கும் இடம் இல்லை.

ஒவ்வொரு ஆண்டும் சாலைகள் பராமரிப்புக்கு திட்டம் தயார் செய்யப்படுகிறது. போக்குவரத்து மிகுந்த சாலைகளின் அகலம் போதுமானதாக இல்லை. இருப்பினும் அவ்வப்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதினாலும், காவல் துறையினரால் போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்படுவதாலும் நெருக்கடி கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகள் குறித்த விதிமுறைகள் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>9) பாலங்கள்</u>**

அ)நகராட்சியிலுள்ள சிறு பாலங்களின் எண்ணிக்கை 1278 அறிக்கையாண்டில் சிறுபாலங்கள் கட்டப்படவில்லை.

ஆ)படகுத்துறை:

இந்நகராட்சியால் படகுத்துறைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

இ) கட்டிடங்கள்

அறிக்கையாண்டில் துறைக்கான கட்டிடங்கள் ஏதும் கட்டப்படவில்லை.

**<u>10.தங்கும் விடுதிகள்:</u>**

இந்நகராட்சியால் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான பயணியர் விடுதி ஒன்று முழுமையான பயன்பாட்டில் இல்லாமல் இருந்ததால் அவை ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்களின் குடியிருப்புகளாக மாற்றப்பட்டுள்ளன.

நகராட்சிக்கு சொந்தமான சத்திரம் ஏதும் பராமரிக்கப்படவில்லை மற்றும் அறக்கட்டளை ஏதும் பேணப்படவில்லை.

## <u>II. போக்குவரத்து</u>

**<u>11. தளவாடங்கள்</u>**

இந்நகராட்சியில் கீழ்காணும் வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| லாரி | 1 | ஈப்பு | 3 |
| டிராக்டர்கள் | 4 | JCB | 1 |
| டிரெய்லர் | 3 | இலகு ரக வாகனம் (LCV) | 20 |
| பேட்டரி வாகனம்(BOV) | 79 | காம்பாக்டர் | 1 |
| டிப்பர் லாரி | 4 | ஸ்கார்பியோ | 2 |
| மினி JCB | 1 | | |

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள வாகனங்களுக்கு அறிக்கையாண்டில் எரிபொருள் மற்றும் பழுதுபார்த்த வகைக்கு ரூ.112.04 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2023-24-ஆம் ஆண்டில் இராஜபாளையம் நகராட்சியில் பின்வரும் திட்டப்பணிகள் நடைபெற்றுள்ளது.

| வ. எண். | பணிகளின் விவரம் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் பகுதி 1 | 8.78 | சாலை பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 2 | State Urban Infrastructure Development 2022-2023 - நகராட்சி பகுதிகளில் உள்ள குழல் விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ளுதல். | 6.25 | பணி முடிக்கப்பட்டு விட்டது. |
| 3 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் – பழையபேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணி | 2.90 | பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 4 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் பகுதி 2 | 4.88 | பணி முடிக்கப்பட்டு விட்டது. |
| 5 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் பகுதி 3 | 18.80 | பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 6 | 24x7 குடிநீர் பணி அம்ரூத் 2.0 | 26.10 | பணி ஆணை வழங்கப்பட உள்ளது |
| | **மொத்தம்** | 67.71 | |

**அடிப்படை வசதி அபிவிருத்தி திட்டம் :-**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 146 நாள் 14.10.2022ல் வழி காட்டியுள்ள வழி முறைகளின் படியும் இந்நகர் மன்றத் தீர்மானம் எண் 105 நாள் 11.04.2022ன்படியும் அனுமதி அளித்த்தின்படியும் Clout HI Tech innovation Private Limited அவர்களுக்கு தெரு விளக்குகளை பராமரிப்பு தனியார் நிறுவனம் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. நான்கு மின் கம்பியாளர்களும் நான்கு உதவியாளர்களும் இந்நகராட்சியிலுள்ள இதர அத்தியாவசிய பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் மின் கட்டணச் செலவு ரூ.219.03 லட்சம் ஆகும். அறிக்கையாண்டில் பராமரிப்பு செலவு ரூ.77.95 லட்சம் ஆகும். மேலும் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றம் செய்ய நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டு தரப்பரிசோதனை பெறுவது சம்மந்தமாக அரசு அனுமதி எதிர்நோக்கி பணி துவங்கும் நிலையில் உள்ளது, மற்றும் 15 வது நிதி குழு UNTIED –GRANT 2021-2022 ல் 272 LED தெருவிளக்குகள் புதியதாக அமைப்பதற்கும் அரசு அனுமதி பெற்று பணி பணிகள் முடிக்கப்பட்டது.

**நகராட்சியால் பராமரிக்கப்படும் தெரு விளக்குகள் (31.03.2023) பின்வருமாறு**

| வ.எண் | விளக்குகளின் எண்ணிக்கை | 31.03.2023 அன்று உள்ளவை |
|---|---|---|
| 1 | 1X40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 2702 எண்ணம் |
| 2 | 1x70 வாட்ஸ் சோடியம் விளக்குகள் | 1554 எண்ணம் |
| 3 | 1x250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் | 489 எண்ணம் |
| 4 | 400 வாட்ஸ் மெட்டல் ஹெலாய்டு விளக்குகள் | 110 எண்ணம் |
| 5 | 250 வாட்ஸ் மெட்டல் ஹெலாய்டு விளக்குகள் | 108 எண்ணம் |

| | | |
|---|---|---|
| 6 | T5 96 வாட்ஸ் விளக்குகள் | 102 எண்ணம் |
| 7 | T5 28 வாட்ஸ் விளக்குகள் | 1051 எண்ணம் |
| மொத்தம் | | 6116 எண்ணம் |

மேற்கண்ட அட்டவணைப்படி அனைத்து பணிகளும் 1 முதல் 42 வார்டுகளில் Fixing செய்து தற்போது வரை நல்ல முறையில் இயங்கி கொண்டு வருகிறது.

## <u>III. கல்வி</u>

### <u>ஆரம்பக்கல்வி:</u>

### <u>13.கல்வி கற்றல் வசதிகள்</u>

நகராட்சி பகுதியில் பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கை 18240 இதில் ஆண் 9680 பெண் 8560 ஆகும்.

அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் 42 தனியார் ஆரம்ப பள்ளிகளும் 2 நகராட்சி ஆரம்ப பள்ளிகளும், அரசு மேல்நிலைப்பள்ளி 2, அரசு மான்யம் பெறும் தனியார் மேல்நிலைப்பள்ளிகள் 5, 1 நகராட்சி நடுநிலைப்பள்ளியும் இருந்தன. புதிதாக ஆரம்ப பள்ளி துவக்கப்படவில்லை.

### <u>15. கல்வி நிதி</u>

அறிக்கையாண்டில் கல்வி வரி வசூல் ரூ.69.79 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு ரூ.42.95 லட்சம் ஆகும். வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் 3வது மற்றும் 8வது வார்டு பள்ளிகளுக்காக அறிக்கையாண்டில் ரூ8.89 லட்சம் வாடகையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

### <u>16. சிறப்பு பள்ளிகள் / பொது நூலகங்கள்:-</u>

இந்நகராட்சியால் பொது நூல் நிலையங்கள் நடத்தப்படவில்லை. திரு.பி.ஏ.சி.ராமசாமி ராஜா கல்வி தர்ம ஸ்தாபனத்தாரால் ஆண்களுக்கான ஒரு தொழில் கல்வி பள்ளி நடத்தப்பட்டு அதில் இயந்திர இயல் அமைப்பியல் மின் இயல், நூற்பு இயல், முதலிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. இது போன்று பெண்களுக்கு என்.ஏ.மஞ்சம்மாள் பாலிடெக்னிக் ஒன்று புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. ராஜிக்கள் கலைக் கல்லூரி ஒன்று தோற்றுவிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும் □ரீராஜ்பகதூர் தர்மராஜா கல்வி ஸ்தாபனத்தால் பெண்களுக்கான கலைக் கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது. மேலும் □ரீராவ்பகதூர் தர்மராஜா கல்வி ஸ்தாபனத்தால் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சி கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது.முன்னாள் ஒரிசா மாநில ஆளுநரும், சென்னை மாநில முதல்வருமான காலஞ்சென்ற திரு.பி.எஸ்.குமாரசாமிராஜா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட காந்தி கலை மன்றம் என்ற பெயரில் இயங்கும் நூல் நிலையத் மாவட்ட நூலக ஆணைக்குழுவால் நடத்தப்படும் பொது நூல் நிலையமும் மக்களுக்கு நல்ல முறையில் பயன்பட்டு வருகின்றன. இதுவரை ஒவ்வொரு ஆண்டும் காந்தி கலை மன்ற நூல் நிலையத்திற்கு ரூ.5000/- நகராட்சியிலிருந்து உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி நூலக வரி தொகை அறிக்கை ஆண்டில் வசூல் செய்யப்பட்ட தொகை 146.78 லட்சங்கள் ஆகும். அறிக்கை ஆண்டிற்கு முந்தைய ஆண்டு 2022-2023 முடிய

செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.255.50 லட்சங்கள் ஆகும். அறிக்கையாண்டில் செலுத்தப்பட்ட தொகை ரூ.160.49 லட்சங்கள் ஆகும். அறிக்கையாண்டில் முடிவில் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.241.78 லட்சங்கள் ஆகும் .

## 17. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம்:

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள இரு ஆரம்ப பள்ளிகளிலும் ஒரு நடுநிலைப்பள்ளியிலும் நகராட்சியின் பொறுப்பில் 01.12.1982 முதல் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திலும் ஒர் அமைப்பாளர் ஒரு சமையலர், மற்றும் ஒரு சமையல் உதவியாளர் பணிபுரிந்து வருகின்றனர்.

அறிக்கையாண்டில் 5+9 வயது பிரிவில் பயன்பெற்ற மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கை 248, 10+14 வயது பிரிவில் பயன்பெற்றோர் மொத்த எண்ணிக்கை 80 ஆகும். அறிக்கையாண்டில் உணவூட்டு மான்யம் சமூக நலத்துறை மூலம் மாவட்ட ஆட்சியர் விருதுநகர் அவர்களின் வழியாக SNB கணக்கு மூலம் சத்துணவு அமைப்பாளர்களின் இந்தியன் வங்கி இராஜபாளையம் கிளையில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. 01.05.12 முதல் அ.ஆ.எண் மான்யம் கிளை கருவூலகம் மூலம் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. சமூகநலம் மற்றும் சத்துணவு திட்ட துறையின் 19.05.2006ம் எண் 50 அரசாணையின்படி புரட்சி தலைவர் எம்.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் உட்கொள்ளும் 5+9 மற்றும் 10+14 வயது பயனாளிகளுக்கு தினம் 1 முட்டை வீதம் வாரம் 5 நாட்களுக்கும் முட்டைகள் வழங்கப்படுகிறது. மேலும் வாரத்தில் வெள்ளிக்கிழமை தோறும் உருளைக்கிழங்கு பொறியல் வழங்கப்பட்டு வருகிறது.

## முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் அரசாணை (நிலை) எண் 56 சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள் 14.08.2023ன்படி – விருதுநகர் மாவட்டம்- இராஜபாளையம் நகராட்சி பள்ளிகள் மூன்றில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின்படி காலை சிற்றூண்டி தொடக்க நாள் 25.08.2023ல் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 2023-2024ம் வருட கல்வியாண்டில் 3வது வார்டு நகராட்சி துவக்கப்பள்ளியில் பயிலும் 51 மாணாக்கர்களும், 8வது வார்டு நகராட்சி நடுநிலை பள்ளி பயிலும் 164 மாணாக்கர்களும், மற்றும் 10வது வார்டு நகராட்சி துவக்கப்பள்ளியில் பயிலும் 57 மாணாக்கர்களும் என மொத்தம் 272 மாணவ, மாணவியர்களுக்கும், அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு பயனந்துள்ளனர். மேலும் அரசாணை (நிலை) எண் 60 சமூகநலம் மற்றும் மகளில் உரிமைத்(சந4-1துறை நாள் 11.09.2023 மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு, ந.க.எண் ஆர்4/08/2023, நாள் 12.09.2023ன்படி நகராட்சி அளவிலாக கண்காணிப்புகுழு, குழுவின் தலைவர் நகராட்சி ஆணையாளர், உறுப்பினர் / செயலராக நகராட்சி மேலாளர் மற்றும் உறுப்பினர்களாக நகராட்சி பொறியாளர், கணக்கர் உதவி பொறியாளர், துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் காமராஜ் நகரில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி நிலையத்தில் அமைந்துள்ள முதலமைச்சரின் காலை உணவு திட்ட மைய சமையல் கூடத்தில் காலை சிற்றூண்டியை ஆய்வு செய்து சுவைத்து தரத்தினை உறுதி செய்த பின்பு HOT BOXல் வைத்து மேற்படி பள்ளிகளுக்கு காலை உணவினை TN67AT7324 TATA AC கதவு மற்றும் பூட்டு,

தாள்பாலுடன் கூடிய கூண்டு வண்டியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட விளம்பர பதாகை பொருத்திய வாகனத்தில் ஒப்பந்ததாரர் திரு.புத்திரகொண்டான் மற்றும் திரு.சுதந்திரராஜ் மற்றும் வாகன ஓட்டுநர் திரு.கே.அழகுராஜ் ஆகியோர்களால் உரிய பாதுகாப்புடன் மேற்படி பள்ளிகளின் தலைமையாசிரியர் மற்றும் தலைமையாசிரியரால் நியமிக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியரால் நியமிக்கப்பட்ட காலை உணவினை குழந்தைகளுக்கு வழங்குபவர் ஆகியோர்களிடம் நேரில் ஒப்படைக்கப்படுகிறது. இதன்பின் தலைமையாசிரியர், குழந்தைகளின் பெற்றோர் மற்றும் உணவு விநியோகிப்பவர்களால் சுகாதாரத்துடன் காலை சிற்றூண்டி வழங்கப்படுகிறது. மேலும், அரசால் செயல்படுத்தப்பட்டுள்ள முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட செயலியில் உரிய நேரத்தில் ஒப்பந்ததாரர் மற்றும் பள்ளியின் தலைமையாசிரியர்களால் காலை சிற்றூண்டி விவரம் மற்றும் பயனடைந்த மாணவர்கள் குறித்த பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. மேலும், பள்ளியின் தலைமையாசிரியர், மாணாக்கர்களின் பெற்றோர் இருவர், மேற்படி திட்ட பொறுப்பாளர் ஆகியோர் கொண்ட பள்ளி அளவிலான கண்காணிப்பு குழுவும் அமைத்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் இத்திட்டத்திற்கான மான்யம் அரசிடமிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழியாக தொகை ரூ.5,97,573,29 பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கான செலவினமாக தொகை ரூ.4,16,240/-ம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.1,81,333,29 இதன் இருப்பாக உள்ளது.

## <u>18. ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்துணவு மையம்:</u>

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துணவு மையங்கள் 32 இந்நகரில் செயல்பட்டு வருகின்றன. இவைகள் செயலாக்கம் ஊட்டச்சத்து அலுவலரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## <u>IV. பொது சுகாதாரம்</u>

## <u>19.மருத்துவ உதவி:</u>

அ) நகர சபையால் மருத்துவமனை ஏதும் பராமரிக்கப்படவில்லை. தாய் சேய் நல விடுதி ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகரின் மத்தியில் அரசினரால் பராமரிக்கப்பட்டு வந்த மருத்துவமனை பெருகி வரும் மக்களின் தேவைக்கேற்ப இந்நகர் எல்லையை அடுத்துள்ள தெற்கு வெங்காநல்லூர் ஊராட்சி எல்லைக்குட்பட்ட இடத்தில் தென்காசி ரோட்டில் 80 படுக்கைகளுடன் நல்ல முறையில் இயங்கி வருகிறது. நகருக்கு மத்தியில் 50 படுக்கைகளுடன் கூடிய மகப்பேறு மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. இந்த மகப்பேறு மருத்துவமனையும் அரசினர் மருத்துவமனையும் இந்நகர் பொது மக்களுக்கு பெரிதும் பயன்பட்டு வருகிறது.

## <u>20. அமைப்பும் பணியாளர்களும்:-</u>

பொது சுகாதாரத் துறை அரசாணை எண். 719 நாள். 18.12.1941இல் நகர் நல அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் நகர் நல அலுவலர் பணியிடம் ஒன்று உள்ளது. பொது சுகாதாரப் பணிகளுக்காக அறிக்கையாண்டில் ரூ.935.98 லட்சம் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. நகரில் 42 வார்டுகளிலும், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் முதற்கட்ட சேகரிப்பு பணிகள் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அறிக்கையாண்டில் பணியாளர்களின் ஊதிய செலவு குறைந்துள்ளது. அறிக்கையாண்டில் தனியார் மயமாக்கல் செலவு ரூ-747.26 லட்சம் ஆகும்.

பொது சுகாதாரப் பணிகளான நுண் உரக்குடில் மற்றும் உரக்கிடங்கு (MCC, OCC, Windrow, BMP), உலர்கழிவுகள் கையாளும் மையம் (RRC-2 எண்ணம்), பூங்கா பராமரிப்பு பணி, புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், புல் புதர் அகற்றுதல், சாலையோர மண் அகற்றுதல், கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்தல், சமுதாய கழிப்பறைகள் / பொதுக்கழிப்பறைகள், புகை மருந்து அடித்தல், தெருக் கூட்டுதல் ஆகிய பணிகள் நகராட்சி நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இதர பணியாளர்களின் விபரம் பின் வருமாறு 01-04-2023 **முதல்** 31-03-2024 **வரை**.

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சுகாதார ஆய்வர் | 1.பொது சுகாதார துறை அரசாணை எண் 119 நாள் 18.02.1941<br>2.பொது சுகாதார இயக்குநர், சென்னை, செயல்முறை ஆணை எண் நி.மு.428/62 நாள் 03.12.1962<br>3.பொது சுகாதார துறை கூடுதல் இயக்குநர் செயல்முறை ஆணை எண் 2000/அ1/72 நாள் 24.02.73<br>4. நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 238 நாள் 14.09.94 | 3<br>1<br>1<br>4 |
| 2 | சுகாதார மேற்பார்வையாளர் | 1.பொது சுகாதாரத்துறை அரசாணை எண் 119 நாள் 18.02.1941<br>2.பொது சுகாதாரத் துறை இயக்குநர், சென்னை, செயல்முறை ஆணை எண் ப.மு.10935/குஏஐஐ/74 நாள் 05.06.1974 | |
| 3 | ஓட்டுநர்(டிராக்டர்) | பொது சுகாதார துறை இயக்குநர், சென்னை செயல்முறை ஆணை எண் நி.மு.53/நு/65 நாள் 29.01.65 | 2 |
| 4 | ஓட்டுநர் (லாரி) | 1.நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 205 நாள் 26.02.90<br>2.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 செயல்முறை ஆணை மூ.மு.70115/90து1 நாள் 21.06.91<br>3.நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5, செயல்முறை ஆணை எண் ந.க.எண் 32105/97/து3 நாள் 18.11.97 | 2<br>4<br>6 |
| 5 | துலக்குநர் | 1.பொது சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர் செயல்முறை ஆணை எண் மூ.மு.205683/நுஏஐஐ நாள் 18.11.72<br>2.நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 205 நாள் 26.02.90 | |

| | | | |
|---|---|---|---|
| 6 | துப்புரவு பணியாளர்கள் | 1. பொது சுகாதாரத் துறை அரசாணை எண் 719 நாள் 18.02.1941<br>பொதுசுகாதாரத்துறை இயக்குநர் சுற்றறிக்கை எண் 46640/இ/41-2 நாள் 28.05.1942<br>2. பொது சுகாதாரத்துறை அரசாணை எண் 2716 நாள் 21.12.1972<br>3. பொது சுகாதாரத்துறை அரசாணை எண் 2716 நாள் 21.12.1972<br>4. பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண் 30242/76/நு,7 நாள் 31.03.1977<br>5. பொது சுகாதாரத்துறை இயக்குநர் ஆணை சி1/5269/06 நாள் 01.06.2009 | 157<br>29<br>1<br>3<br>57<br>97 |
| | | மொத்தம் | 344 |

எனினும் அறிக்கை ஆண்டில் அரசாணை ( நிலை ) எண்:**10,** நாள்:**23–01–2023–**ன்படி சிறப்பு நிலை நகராட்சியான இராஜபாளையம் நகராட்சிக்கு பின்வருமாறு பணியிடங்கள் வரையறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**<u>பொதுசுகாதாரப்பிரிவு</u>**

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகர்நல அலுவலர் | 1 |
| 2 | துப்புரவு அலுவலர் | 1 |
| 3 | துப்புரவு ஆய்வாளர் | 6 |
| 4 | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 10 |
| 5 | களப்பணி உதவியாளர் | 1 |

**<u>21. நல மையங்கள் (Health Posts):</u>**

அரசாணை எண் 764 (சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை) நாள் 31.03.1988ன் படி இந்நகராட்சியில் Out Reach Services Scheme என்ற திட்டம், 01.06.1988 முதல் துவக்கப்பட்டு முற்றிலும் மத்திய அரசு நிதி உதவியால் இயங்கி வந்தது. அரசாணை 1046 (சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை) நாள் 23.07.1993ன்படி 5வது இந்திய மக்கள் தொகைத்திட்டம் என பெயர் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. நகர சுகாதார செவிலியர் என பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இந்நகரில் 01.07.1993 முதல் மூன்று நகர் நல மைங்கள் இயங்கி வருகின்றன. 07.07.2015 முதல் நகர அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 2 இயங்கி வருகிறது. 2 மருத்துவ அலுவலர்கள் டெப்டேசனில் வேலை பார்க்கிறார்கள். இந்நகர் நல மையங்களில் 3 பெண் மருத்தவ அலுவலர்கள், 3 பெண் நலப் பார்வையாளர்கள், 8 நகர சுகாதார செவிலியர் வகுப்பு IV பணியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் 3 பெண் மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது 3 பகுதி சுகாதார செவிலியர் பணியிடங்கள் இருந்தன. 4 பகுதி சுகாதார செவிலியர் பணியிடங்கள் இயங்கி வருகின்றன. அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.67.55 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு செலவு ரூ.59.26 ஆகும்.

| | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | பணிபுரியும் அலுவலர்கள் |
|---|---|---|
| பெண் மருத்துவ அலுவலர் | -- | 2 Deputation |
| பகுதி சுகாதார செவிலியர் | 3 | 3 |
| நகர சுகாதார செவிலியர் | 15 | 14 |
| வகுப்பு 4 மகளிர் | - | - |

**குறிக்கோள்**

1 .தாய் சேய் நலம் கவனிப்பு

2. பிரசவம் பார்த்தல்

3. கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல்

4. மருத்துவ முறையில் கருக்கலைப்பு செய்தல்

5. தற்காலிக கருத்தடை சாதனங்கள் வழங்குதல்

6. முதல் உதவி மற்றும் சில காயங்களுக்கு மருத்துவம் செய்தல்

7. தொற்று நோய்களான காச நோய், மலேரியா, தொழுநோய்

போன்றவைகளை கண்டறிந்து குணப்படுத்துதல்

8.தாய்மார்களுக்கு பேறுகால முன்கவனிப்பு செய்தல், குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு பின் கவனிப்பு மற்றும் குழந்தைகள் கவனிப்பு செய்தல், குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு தடுப்பூசி போடுதல்.

9. குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைத்தல்

10.இனப்பெருக்க நோயினை கண்டறிந்து அதன் தொடர்பான இறப்பினை குறைத்தல்

11.அனைத்து நோய்களையும் கண்காணித்தல்

22) **போலியோ சிறப்பு முகாம்**

அறிக்கையாண்டில் போலியோ சிறப்பு முகாம் நடைபெறவில்லை.

23) **வாழ்வொளி திட்டம்**:-

இந்நகராட்சி பகுதியிலுள்ள பள்ளி குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்டு குழந்தைகளிடம் குறைபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டு ஐந்து முதல் ஆறு வயதுக்குட்பட்ட 4105 குழந்தைகளுக்கு D.T தடுப்பூசியும் 10 வயது 2365 குழந்தைகளுக்கு D.D தடுப்பூசியும் பதினாறு வயது மாணவ மாணவியர் 2156 பேருக்கு பேருக்கு T.T தடுப்பூசியும் போடப்பட்டது.

**<u>24) பிறப்பு விகிதமும் பேறுசார் கவனிப்பும் :</u>**

அ) பிறப்பு விகிதம் இந்நகராட்சியில் 5 துப்புரவு ஆய்வர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பிறப்பு இறப்புகளை தத்தம் பகுதி அலுவலகத்தில் பதிவு செய்து வருகிறார்கள்.

அறிக்கையாண்டில் மொத்தம் 1386 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டது. பிறப்பு விகிதம் 9.95% ஆகும். சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 1728 ஆகும். சென்ற ஆண்டு பிறப்பு விகிதம் 12.40 சதவீதம் ஆகும்.

**<u>ஆ) தாய் சேய் நல மையம்</u>**

இந்நகராட்சியில் 16 படுக்கைகள் கொண்ட பி.எஸ்.குமாரசாமிராஜா ஞாபகார்த்த தாய்சேய் நலவிடுதி ஒன்று நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் 22.12.1963 முதல் இந்நகராட்சியால் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. பணியாளர்கள் விபரம் பின்வாருமாறு

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர் நீ.மு எண் 74420/74/நு,ஏஐஐ நாள் 09.12.74 | 1 |
| 2 | நலப்பார்வையாளர் | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை மு.மு. 330/83/ப.தொ. நாள் 12.04.85 | 1 |
| 3 | மகப்பேறு உதவியாளர் | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண் 178/42 நாள் 29.12.42<br>பொது சுகாதாரத்துறை அரசாணை எண் 650 நாள் 02.03.1948<br>பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண் 534/45 நாள் 23.02.1949<br>பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண் 53/49 நாள் 19.06.1950<br>பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண் 264/49/நு/ளு2 நாள் 19.06.1950<br>பொது சுகாதாரத்துறை அரசாணை எண் 408 நாள் 23.02.1965 | 1<br>1<br>1<br>1<br>1<br>1 |

| | | | |
|---|---|---|---|
| | | | 7 |
| 4 | மகப்பேறு ஆயா | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண் 178/42 நாள் 29.12.42<br>பொது சுகாதாரத்துறை அரசாணை எண் 650 நாள் 02.03.1948 | -<br><br><br>4 |
| 5 | அலுவலக உதவியாளர் | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண் மு.மு. 330/83/ப.தொ. நாள் 12.04.85 | - |
| 6 | இரவு காவலர் | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண் மு.மு. 330/83/ப.தொ. நாள் 12.04.85 | - |

பிரசவம் பார்த்தல், கர்ப்பிணிகள் கவனிப்பு குழந்தைகள் கவனிப்பு முதலிய பணிகள் புரிந்து வருகின்றனர்.

## 25. **இறப்பு விகிதம்**

அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 981 ஆகும். இறப்பு விகிதம் 7.04% ஆகும். சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 1127 சென்ற ஆண்டு இறப்பு விகிதம் 9.80% ஆகும்.

## 26. **தொற்றுநோய்கள் – கொள்ளை நோய்கள்**

அறிக்கையாண்டில் காலரா, தொற்று நோய்கள் இந்நகரில் ஏறபடவில்லை. காலரா மற்றும் தொற்று நோய்கள் வராமலிருக்க தேவையான தடுப்பு மருத்துகள் போதிய அளவு வையிருப்பு வைத்துக் கொள்ளப்பட்டது. அரசாங்க மருத்துவமனைக்குள் 3 படுக்கைகள் கொண்ட தொற்று நோய் விடுதி ஒன்று நிரந்தரமாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

கொசு தொல்லையை ஒழிக்க புழு கொல்லி மருந்து ஒவ்வொரு வார்டுகளிலும் 16 தினக்கூலி பணியாளர்களை கொண்டு தெளிப்பான் மூலம் கொசு உற்பத்தியாகும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்கள், சாக்கடை தொட்டிகள், வாறுகால்கள் ஆகிய இடங்களில் தெளிக்கப்பட்டு வருகிறது. பிரத்தியோகமான கொசு ஒழிப்புத் திட்டம் அமுல் படுத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் மூலம் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அரசிற்கு விண்ணப்பபிக்கப்பட்டுள்ளது. மேலும் டெங்கு காய்ச்சல் மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் அரசு வழிகாட்டுதல்படி நடைபெற்று வருகிறது. 2014-2015ம் ஆண்டில் இந்நகர் பகுதியில் டெங்கு காய்ச்சல் வரப்பெற்று அதனை தடுக்க DBC பணியாளர்கள் பொது சுகாதார களப் பணியாளர்கள், நலப் பணியாளர்கள், மருத்துவ அலுவலர், சுகாதார ஆய்வர்கள், பகுதி செவிலியர்களை கொண்டு தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு டெங்கு காய்ச்ச முற்றிலும் ஒழிக்கப்பட்டது.

## 27.**துப்புரவு பணிகள்**

அ) சுகாதார பிரிவில் மொத்தம் அனுமதிக்கப்பட்ட 6 பிரிவுகளில் 5 சுகாதார ஆய்வாளர்களும், 10 பொது சுகாதார மேற்பார்வையாளர்களும், 7 ஓட்டுநர்களும், 115 நிரந்தர துப்புரவு பணியாளர்களும் பணியாற்றினார்கள், துப்புரவு பணிக்காக 2 லாரிகள், 3 டிரெய்லருடன் கூடிய டிராக்டர்கள், 3 டம்பர் பிளேசர் லாரிகள் மற்றும் 1 காம்பாக்டர் வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் மொத்தம் 580 இருக்கைகள் கொண்ட 54 நவீன கழிப்பறைகளும், 4 சிறுநீர் கழிப்பிடங்களும் இருந்தது. நகரிலுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 50887 இதில் கழிப்பறை வசதி உள்ளவைகள் 43983 ஆகும். 1993ம் ஆண்டு மனிதக் கழிவுகளை அகற்ற பணியாளர்களை அமர்த்துவதையும் உலர் கழிப்பிடங்கள் கட்டுவதையும் தடை செய்யும் சட்டத்தின் கீழ் (மையச்சட்டம் 46/1993) மனிதக் கழிவுகளை அகற்ற பணியாளர்களை அமர்த்துவது குற்றம் என நகராட்சியிலிருந்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சுகாதார வளாகம்**

**அ. நகரில் 6 இடங்களில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் உள்ளன.**

1. பூபால்பட்டி தெரு, 2
2. சிங்கராஜாகோட்டை தெரு 1
3. சோமையாபுரம் தெரு 1
4. ஆர்.சி.சர்ச் தெரு 1
5. முனியம்மன்பொட்டல் தெரு 1

**ஆ.வாம்பே**

வாம்பே (Vambay) திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட 4 இடங்களில் சுகாதார வளாகங்கள் உள்ளன.

1.பேருந்து நிலையம் கீழ்புறம்

2.சின்னச்சுரைக்காய்பட்டி அண்ணாநகர்

3. கீழ் அவரம்பட்டி

4.பி.எஸ்.கே நகர் தாய்சேய் நல விடுதி அருகில்

துப்புரவு பணியாளர்கள் நாள் தோறும் காலையில் 5 மணிநேரமும் மாலையில் 3 மணி நேரமாக மொத்தம் 8 மணி நேரம் பணி செய்கிறார்கள் அவர்களுக்கு அனைத்து ஞாயிற்று கிழமைகளில் விடுமுறை கொடுக்கப்பட்டுள்ளது. பிரதான சாலைகள், பேருந்து நிலையம், பொது கழிப்பிடங்கள் முதலிய முக்கியமான இடங்களை தினமும் சுத்தம் செய்யப்படுகின்றன. துப்புரவு பணியாளர்கள் அனைவருக்கும் இலவசமாக காலனி, சீருடைகளும், சோப்புகளும் அறிக்கையாண்டில் வழங்கப்பட்டது.

## 28. திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல்

சுற்றுப்புறச் சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986ன் கீழ் மத்திய அரசு, நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 என்ற விதிகளை இயற்றியுள்ளது. இவ்விதிகளின்படி அனைத்து நகராட்சிகளும், குப்பைகளை சேகரித்தல், பிரித்தல், பாதுகாத்தல், குப்பைக் கிடங்குக்கு அனுப்புதல், மற்றும் முடிவு செய்தல் ஆகிய பணிகளுக்கு நகராட்சிகள் முற்றிலும் பொறுப்பாக்கப்படுகின்றன.

மேற்கண்ட விதிகளின்படி, (1) நகராட்சி எல்லைக்குள் குப்பைகளை கண்ட இடத்தில் எறியக்கூடாது. (2) வீடுகள் தோறும் சென்று குப்பைகளை சேகரிக்க வேண்டும். (3) வீடுகள் தோறும் சென்று குப்பைகளை சேகரிப்போர் குப்பைகள் சேகரிக்க வருகிறார்கள் என்பதை தெரிவிக்க ஒலி எழுப்ப வேண்டும். (4) குறிப்பிட்ட நேரங்களில் குப்பைகள் நகராட்சி குப்பை சேகரிக்கும் பணியாளரால் சேகரிக்கப்பட வேண்டும். (5) உணவு விடுதிகள் அலுவலகங்களில் மற்றும் வணிகப்பகுதிகளில் சென்று அங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ள கூடைகளிலிருந்து குப்பைகளை அகற்ற வேண்டும். (6) இறைச்சிக்கடைகள் மற்றும் மீன் கடைகள் மற்றும் காய்கறிக்கடைகளிலிருந்து வெளியேறும் மக்கும் குப்பைகளைத் தனியாக சேகரிக்க வேண்டும். (7) மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத இரும்பு, பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி கலந்த குப்பைகளை கலக்காமல் தனித்தனியாக பிரித்து சேகரித்து வாங்க வேண்டும். (8) மருத்தவ கழிவுகள் இதர கழிவுகளுடன் கலக்காமல் தனியாக பாதுகாப்பாக சேகரிக்கப்பட்டு தனியாக அழிக்கவேண்டும். இவ்விதிகளின்படி மருத்துவக் கழிவுகளை உருவாக்குவோரே அவற்றை அழிப்பதற்கும் முழுப்பொறுப்பாகிறார்கள், (9) குப்பைகள் எக்காரணம் கொண்டும் உரிக்கப்படலாகாது. (10) தோட்டக்கழிவுகள் மற்றும கட்டுமான கழிவுகள் கலக்கப்படாமல் தனித்தனியாக சேகரிப்பட்டு அப்புறப்படுத்த வேண்டும்.

இந்நகராட்சியிலுள்ள 42 வார்டுகளில் பொது மக்கள் தாங்களே முன் வந்து பச்சை வண்ணக் கூடைகளில் மக்கும் குப்பைகளையும் நீல வண்ணக்கூடைகளில் மக்காத பிளாஸ்டிக் இரும்பு மற்றும் கண்ணாடிக் கழிவுகளை சேர்த்து காலை 7 மணி முதல் தங்கள் வீட்டு வாசலில் வைத்து விடுகிறார்கள்.

குப்பை அள்ளும் / சேகரிக்கும் துப்புரவு பணியாளர்கள் தாங்கள் தெருக்களில் வருவதை தெரிவிக்க குப்பை என உரக்கச் கத்தியோ அசல் விசில் மூலமாக சத்தமிட்டோ தெரிவிக்கிறார்கள். துப்புரவு பணியாளர்கள் தங்களுடன் கொண்டு வரும் தள்ளுவண்டிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைக்காக தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளதால் குப்பைகளை தனித்தனியாக பிரித்து வாங்கிக் கொள்கிறார்கள். தெருக்கள் சுத்தமாக உள்ளன. பொதுமக்கள் தெருக்களில் அல்லது வாறுகால்களில் குப்பைகளை எரிவதை நிறுத்தியுள்ளார்கள். திடக்கழிவு மேலாண்மை பற்றி அனைத்து வார்டுகளுக்கும் நகர்நல அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வர்கள் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதால் நகரின் பொது சுகாதாரம் வெகுவாக சீரடைந்துள்ளது.

மேற்கண்ட விதிகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுக்கான கூட்டங்களில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல், பிளாஸ்டிக் பொருட்கள் இதர கழிவுகளுடன் சேர்க்கப்படுவதால் ஏற்படும் தீமைகள் ஆகியவற்றை விளக்கி பொதுமக்களுக்கு இவற்றை தெரியப்படுத்துமாறு இந்நகராட்சி கேட்டுக்கொண்டுள்ளது. பிளாஸ்டிக்குகள்

மண்ணில் சேர்வதால் அவை பலநூறு ஆண்டுகள் மண்ணுடன் மக்காமல் மழைநீரை நிலத்தடி நீருடன் சேரவிடாமல் வருங்காலங்களில் பெரும் குடிநீர் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் பிளாஸ்டிக் பொருட்களை கால்நடைகள் உண்பதால் அவைகள் அகால மரணமடைகின்றன எனவும், பிளாஸ்டிக் எரிக்கப்படுவதால் டயாக்ஸின் எனப்படும் கொடிய நச்சு காற்றில் கலந்து அதனால் புற்று நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது எனவும், மக்களுக்கு பல்வேறு கூட்டங்களில் எடுத்துரைக்கப்பட்டது.

பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மனிதச் சங்கிலி, மாணவர் பேரணி போன்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டு கேபிள் டிவி மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் திடக்கழிவு மேலாண்மை பற்றி விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன. மாணவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த ECO Club எனப்படும் சுற்றுப்புறச் சூழல் சங்கம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. இச்சங்கத்திலுள்ள மாணவர்கள் தாங்களாகவே முன்வந்து தங்கள் வீடு பள்ளி தெருக்களில் ஆங்காங்கு தென்படும் பிளாஸ்டிக்குகளை அப்புறப்படுத்துவது மட்டுமன்றி பிரதான சாலைகளின் இருபக்கமும் மண்ணை அள்ளி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

நகரிலுள்ள ஒவ்வொரு கடைகள் மற்றும் வணிக ஸ்தலங்களுக்கு நேரில் சென்று சுகாதார ஆய்வர்கள் வற்புறுத்துவதால் கடை உரிமையாளர்கள் தாங்கள் வெளியேற்றும் கழிவுகளை குப்பைக் கூடைகளில் வைத்திருந்து துப்புரவு பணியாளர்களிடம் கொடுக்கிறார்கள். இதனால் பிரதான சாலைகளில் குப்பைகள் எரியப்படுவது குறைந்துள்ளது.

மேலும் திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2016ன்படி இந்நகராட்சியால் துணை விதிகள் இயற்றப்பட்டு மன்றத் தீர்மானம் எண் 53 நாள் 13.01.2017 நிறைவேற்றப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டு துணை விதிகளை பின்பற்றாத வணிக நிறுவனங்களுக்கு சேவை கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

நகலிலுள்ள அனைத்து தனியார் மருத்துவர்களும் நகராட்சிக்கு அழைக்கப்பட்டு அவர்களின் மருத்துவக் கழிவுகளை அவர்களே பொறுப்பாக எரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு தற்சமயம் தனியார் நிறுவனம் மூலம் சேகரிக்கப்பட்டு எடுத்து செல்லப்பட்டு காரியாப்பட்டி அருகே பாதுகாப்பாக எரிக்கப்படுகிறது.

மேலும் அரசாணை எண் 69 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.05.98ல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி இந்நகரில் ஏற்கெனவே பணிபுரியும் துப்புரவுப்பணியாளர்களின் பணிகளுக்கு பாதகம் ஏதும் ஏற்படாவண்ணம் இந்நகரிலுள்ள 24 வார்டுகள் மற்றும் பழைய பேருந்து நிலையம் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 29. கலவை உரம்

அ.இராஜபாளையம் நகராட்சி எல்லைக்கு கிழக்கில் (சஞ்சீவிமலைக்கு கிழக்கில் புதுப்பாளையம் கிராமம் புல எண்கள் 2,29/1, 29/3 பகுதியில் அமைந்துள்ள அரசு புறம்போக்கு இடங்களை நகராட்சிக்கு தரம் மாற்றி பட்டா வழங்கக் கோரியும் புல எண்கள் 29,2a, 2b, 28, ½ பகுதியில் அடங்கும் தனியார் பட்டா நிலங்களை கிரையம் மூலம் இந்நகராட்சிக்கு புதிய உரக்கிடங்கு அமைப்பதற்கு தனிநபர் பேச்சு வார்த்தை மூலம் பெற்றுத்தரக் கோரியும் நகர் மன்றத் தீர்மானம் எண் 447 நாள் 08.09.04ல் தீர்மானிக்கப்பட்டு உரிய கருத்துரு இவ்வலுவலக

ந.க.5280/1999/எப்2 நாள் 16.06.2000 கடிதத்தில் வருவாய்த்துறைக்கு அனுப்பப்பட்டது. விருதுநகர் மாவட்ட ஆட்சியர், அவர்கள் தமது 31.05.2001ம் தேதிய ந.க59276/2000/அ4 எண் செயலாணை கடிதத்தில், இராஜபாளையம் வட்டம், புதுப்பாளையம் கிராமம் புல எண்கள் 2,29 29/3ல் உள்ள வாய்க்கால் புறம்போக்கு நிலத்தில் 2.58 ஹெக்டேர் (6.37 ஏக்கர்) உரக்கிடங்கு அமைக்க இந்நகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. தனியாருக்கு பாத்தியமான புல எண்கள் ½ பகுதி 29/2A1, 2A2, 29/2B1, B2, 28ல் 13.98 ஏக்கர் பரப்புள்ள பட்டா இடங்களை தனி நபர் பேச்சு வார்த்தை மூலம் பெறப்பட்டு வட்டாட்சியர் அவர்களின் 11.06.06ல் தேதிய ந.க.அ3/15.01.04ன்படி நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா மாறுதலும் செய்யப்பட்டு விட்டது. மேலும் உரக்கிடங்கும் அமைக்கப்பட்டு கலவை உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**ஆ) ஆபத்தானதும் அருவருக்கத்தக்கதுமான வாணிபங்கள்**

இந்நகரில் நடைபெறும் ஆபத்தானதும் அருவருக்கத்தக்கதுமான வணிகங்கள் மற்றும் தொழில்கள் அனைத்தையும் சுகாதார ஆய்வாளர்களால் பார்வையிடப்பட்டு குறைகள் இருந்தால் நிவர்த்தி செய்யப்பட்டு உரிமங்கள் வழங்கப்பட்டது. இதற்காக அறிக்கையாண்டில் கட்டணமாக ரூ.14.13 லட்சம் வசூல் செய்யப்பட்டது. இவைகளை முறைப்படுத்த துணை விதிகள் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

**இ) திருவிழாக்கள் சந்தைகள்:**

இந்நகரில் பிரசுரம் செய்யப்பட்ட திருவிழாக்கள் ஏதும் இல்லை. அறிக்கையாண்டில் சித்திரை மாத பிறப்பன்று சித்திரை திருவிழாவிற்கு, தேவையான சுகாதார வசதிகள் இந்நகராட்சியால் செய்து கொடுக்கப்பட்டது. யாத்திரை வரி அல்லது கட்டணம் வசூல் செய்வது இந்நகராட்சியில் அமுலில் இல்லை.

**30.குடிநீர் விநியோகம்**

**குடிநீர் அபிவிருத்தி திட்டம்**

இந்நகர் மக்களுக்கு தேவையான குடிநீர் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரமான அய்யனார் கோவில் அருகே முடங்கியாற்றின் குறுக்கே அணைகட்டி நீர் எடுக்கப்பட்டு, கோடை குடிநீர் தேக்கத்தில் சேமிக்கப்பட்டு, கோடை குடிநீர் தேக்கத்தின் மூலம் நகருக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1974ம் ஆண்டு ரூ.75.15 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செய்து முடிக்கப்பட்டு இந்நகராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டது. அய்யனார் கோவில் அருவிக்கு மேலாக ஆற்றுப்படுகையில் கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து மழைக்காலங்களில் வரும் தண்ணீரை 600CI MM குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுமார் 40 மில்லியன் கன கொள்ளளவு உள்ள குடிநீர் தேக்கத்தில் தேக்கப்படுகிறது. தேக்கப்பட்ட தண்ணீரை 5 லட்சம் காலன் கொள்ளளவு கொண்ட நான்கு சுத்திகரிப்பு தொட்டிகளுக்கு குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்து குளோரினேசன் செய்து 600 mm Rcc Pipe வழியாக 13 கீ.மீ நீளமுள்ள குழாய்கள் வழியாக நகரிலுள்ள 7 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தன்னோட்டத்தால் வழியாக 209 பொதுக்குழாய்களுக்கும் 28865 குழாய் இணைப்புகளுக்கும் நாள் ஒன்றுக்கு 85 லட்சம் லிட்டர் குடிநீர் 133.50 கி.மீ நீளமுள்ள தன்னோட்ட பிரதான குழாய் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. இது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 122 லிட்டர் ஆகும்.

உட்பிரதான குழாய்கள் பதிக்காத இடங்களுக்கு 2 லாரிகள், ஒரு டிராக்டரில் உள்ள டேங்கர் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வறிக்கையாண்டில் நகரில் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 630 ஆழ்துளைக் கிணறுகள் இயங்கி வருகின்றன.

மேலும் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரமான பழைய கோடைகால நீர் தேக்கத்தில் தற்போது முழு கொள்ளளவான 18.00 அடி நீர் இருப்பும் உள்ளது. புதிய கோடைகால நீர் தேக்கத்தில் அடி நீர் 13. அடி இருப்பில் உள்ளது.. தற்போது கோடைகால நீர் தேக்க இருப்பு மற்றும் தலைமை நீரேற்று நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 29 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் 11 எண்ணம் திறந்த வெளி கிணறுகளிலிருந்து நாள்தோறும் 16.45 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு 2 நாட்கள் இடைவெளியில் 114 எல்.பி.சி.டி வீதம் குடிநீர் விநியோகம் தங்கு தடையின்றி செய்யப்பட்டு வருகின்றது.

இந்நகரின் கூடுதல் குடிநீர் தேவையை கருதி தாமிரபரணி ஆற்றினை நிர் ஆதாரமாக கொண்டு கூட்டு குடிநீர் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு கூட்டு குடிநீர் திட்டமாக இராஜபாளையம், சங்கரன் கோவில், புளியங்குடி, சிவகாசி மற்றும் திருத்தங்கல் ஆகிய ஐந்து நகராட்சிகளுக்கான தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.543.20 கோடி மதிப்பீட்டில் (இராஜபாளையம் நகராட்சிக்கான திட்ட நிதி 173.70 கோடியில் அம்ரூத் திட்டம் 2015-2016ன் கீழ்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 6 நாள் 30.01.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு எம்.எஸ் அன்னை இன்ப்ரா டெவலப்பர்ஸ் ஈரோடு நிறுவனத்தாருக்கு 06.12.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை உயர் மட்ட நீர்தேக்கத் தொட்டிகள் 9 எண்ணம், 1 எண்ணம் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

மேற்கண்ட பணிகள் 6/2024-ஆம் ஆண்டில் முழுமையாக முடிக்கப்பட உள்ளதாக குடிநீர் வடிகால் வாரியத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. திட்டம் பயனுக்கு வந்த பின்னர் இராஜபாளையம் நகராட்சி நகர் முழுவதும் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 7 எல்.பி.சி.டி வீதம் தினமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சோதனை ஓட்டம் நடைபெருகிறது முழுவதும் முடிக்கப்பட்ட பின்பு 135 எல்.பி.சி.டி வழங்கப்படும்.

**குடிநீர் குழாய் இணைப்பு வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் விவரம்**

வரையறுக்கப்பட்ட குடிநீர் கட்டணம் ஒரு குழாய்க்கு மாதம் ரூ.50 வீதமும் குடிநீர் மிகுவரியாக ஆண்டு ஒன்றிற்கு ரூ.12/- வீதமும் மீட்டர் ரேட்டில் உபயோகத்திற்கு ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கு ரூ.5/- வீதமும், வீட்டு உபயோகமில்லா இணைப்புகளுக்கு 1000 லிட்டருக்கு ரூ.10/- வீதமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஆயினும் இதில் குறைந்த பட்ச கட்டணமாக ஆண்டிற்கு ஒரு குடியிருப்புக்கு ரூ.50/- வீதமும் மற்ற உபயோகத்திற்கு ரூ.100/- வீதமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் வீடுகளுக்கு வைப்புத் தொகை ரூ.5000/- வணிகம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு ரூ.10000/- மட்டும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தில் குடிநீர் நகருக்கு கிடைக்கப்பெற்றபின்னர் குடிநீர் கட்டண உயர்வு செய்ய நகர்மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் குடிநீர் கட்டணம் வசூல் ரூ.712.79 லட்சம் ஆகும். குடிநீர் குழாய் இணைப்பு பழுது பார்த்தல் மற்றும் இதர இனங்களில் வரவு ரூ.30 லட்சம். பணியாளர்கள் செலவு ரூ.90.53 லட்சமாகும்.

அறிக்கையாண்டில் இறுதியில் மொத்த இணைப்புகள் பின்வருமாறு

| | |
|---|---|
| வீட்டு இணைப்புகள் | 28527 |
| தொழிற்சாலை இணைப்புகள் | 19 |
| வணிக இணைப்புகள் | 319 |
| மொத்தம் | 28865 |

மீட்டர் அளவுக் கருவிகள் அனைத்தும் வீட்டு உரிமையாளர்களால் செலவில் பொருத்தப்பட்டதாகும்.

**<u>மழை நீர் சேகரிப்பு</u>**

தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்து விட்டதால் நிலத்தடி நீரின் சேமிப்பு பெருக வீணாகும் மழை நீரை சேகரிக்க தமிழ்நாடு அரசு திட்டம் ஒன்றை தயாரித்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேமிப்பு கட்டாயமாக்கப்பட்டு தமிழ்நாடு நகராட்சி கட்டட விதிகளின் உரிய திருத்தம் செய்து நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் 128 நாள் 11.10.2002 மற்றும் அரசாணை எண் 168 நாள் 11.11.2002 வெளியிடப்பட்டது. இந்த திருத்தத்தின்படி கட்டிட உரிமையாளர்கள், உபயோகிப்பாளர் 15.07.2015ஆம் தேதிக்குள் (மழைக்காலம் ஆரம்பமாகும் முன்) தனது சொந்த செலவிலும் பொறுப்பிலும் அரசு வழிகாட்டுதலின்படி மழைநீர் சேகரிப்பு கட்டாயம் ஏற்படுத்த வேண்டும். தவறினால் நகராட்சியே அத்தகைய மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தி அதற்கான செலவு தொகையை உரிமையாளரிடமிருந்து வசூல் செய்ய வழிவகுக்கப்பட்டது.

இராஜபாளையம் நகராட்சி பகுதியில் மழைநீர் சேகரிப்பு அவசியம் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி மாணவ மாணவியர் ஊர்வலம், பொதுமக்கள், மன்றத்தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் ஊர்வலங்களில் கலந்து கொண்டனர். சுவர்விளம்பரங்கள், வரைபடங்கள், விளம்பரப்பலகைகள் நகரின் பல பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டன. தொலைக்காட்சி வாயிலாகவ்வும் துண்டுபிரசுரங்கள் வாயிலாகவும் விழிப்புணவு விளம்பரம் செய்யப்பட்டது. நகரின் அனைத்துப் பகுதிகளிலும் அரசு அலுவலக கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு உறுதிமொழி வாசகங்கள் எழுதப்பட்டன. ஒவ்வரு வரி விதிப்பு எண்களிலும் மழைநீர் சேமிப்பின் பயன்களை பொது மக்களிடம் எடுத்துரைத்து மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தப்பட்டது.

இதன் பயனாக நகராட்சிப் பகுதியிலுள்ள கட்டிடங்களில் தனியார் குடியிருப்புகள் 42745 வணிக கட்டிடங்கள் 6455 தொழிற்சாலை 1059 ஆக மொத்தம் 50259 கட்டிடங்களில் உரிமையாளர்களாகவே முன் வந்து மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. எஞ்சியுள்ள கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் கட்டிட அனுமதிகோரி வரப்பெறும் விண்ணப்பதாரரிடம் மழைநீர் சேகரிப்பு கட்டணமாக ரூ.1000/- வைப்புத் தொகையாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தி திறந்த வெளிகளிலும் அதாவது சாலை ஓரங்கள், குளம், குட்டைகள் ஆகியவற்றில் மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தவும் அரசினரால் ஆணையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>31. பாதாள சாக்கடைத்திட்டம்</u>**

இந்நகரில் பாதாள சாக்கடை திட்டம் (கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கழிவு நீர் உந்து நிலையம் (ம) நீரேற்று நிலையம்) அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.41.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு வாரியத் தலைமை அலுவலகத்திலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளதாகவும் 25.04.08 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற தொழில்நுட்ப நிலைக்குழுக் கூட்டத்தில் தல ஆய்வு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் தொழில் நுட்ப நிலைக்குழு தல ஆய்வு செய்த பின் விரிவான திட்ட அறிக்கை திருத்தம் செய்து இறுதித் திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என விருதுநகர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் அவர்களின் 21.01.2009ம் தேதிய ந.க.12இவஅ1.கொ இராஜபாளையம் பா.சா.தி 2009 எண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு தொடர்ந்து நடவடிக்கையில் இருந்து வருகிறது. பாதாள சாக்கடைத்திட்டம் அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ251.20 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு அறிக்கை ஆண்டில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 31-06-2024 வீட்டு இணைப்புகள் முடிவு பெற உள்ளதாக குடிநீர் வடிகால் வாரியத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>32. பொது சுகாதார –பாதுகாப்பு நடவடிக்கை</u>**

அ) சுகாதாரப் பணிகள், துணை இயக்குநர், சிவகாசி அவர்களின் 07.05.2022 ஆம் தேதிய ந.க.எண் 111/சி5/20002ல் கண்ட உத்திரவின்படி இந்நகராட்சியில் ஐ.எஸ்.ஐ முத்திரையில்லாத தண்ணீர் பாக்கெட்டுகள் தண்ணீர் பாட்டில்கள் தண்ணீர் கேன்கள் ஆகியவை விற்கப்படுகிறதா என உணவு ஆய்வர் மற்றும் சுகாதார ஆய்வர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து வருகிறார்கள்.

ஆ) நகராட்சிப் பகுதியில் தீயணைப்பு நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. அலைந்து திரியும் பன்றிகள் மற்றும் நாய்கள் கட்டுப்பத்தி தொடர்ந்து அழிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>நுண் உர செயலாக்க மையங்கள் (MCC) பற்றிய அறிக்கை</u>**

இராஜபாளையம் நகராட்சியில் இது நாள் வரை பி.எஸ்.கே.நகர் மங்காபுரம், மற்றும் நகராட்சி அலுவலக பின்புறம் என மொத்தம் 3 நுண் உர செயலாக்க மையங்கள் (Micro Compost Center) (5+5+2=1மெடன்) 12 மெடன் திறனின் செயல்பட்டு வருகின்றன. இந்நகராட்சி பகுதியிலுள்ள 42 வார்டுகளிலும், சேகரமாகும் மக்கும் குப்பைகளை மட்டும் தனியாக பிரித்தெடுத்து மேற்படி மையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு நுண் உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

## <u>V. வருவாய் ஈட்டும் இனங்கள்</u>

சஞ்சீவி மலைக்கருகில் துப்புரவு பணியாளர்களுக்கு 75 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வாடகையின்றி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 33. போக்கு வரத்துக்கள்

இந்நகராட்சியால் பேருந்து போக்குவரத்து மற்றும் இதர போக்குவரத்து ஏதும் நடத்தப்படவில்லை. போக்குவரத்து பேருந்துகள் அனைத்தும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், தமிழ்நாடு விரைவு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகரைச்சுற்றியுள்ள கிராமங்களுக்கும் பிரதான ஊர்களுக்கும் 300 பேருந்து வண்டி தொடர்பான உள்ளன நகரில் புகைவண்டி நிலையம் ஒன்று உள்ளது.

## 34. சந்தைகள், பேருந்து நிலையம், ஆடு அடிக்கும் இடம் முதலியன

வருகை ஆண்டில் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை, சைக்கிள் நிறுத்துமிடம் ஆகியன பொது மக்களின் நன்மையை கருதி குத்தகைக்கு விடப்பட்டது. பேருந்து நிலையம், ஆடு அடிக்கும் இடம் மற்றும் கோடை குடிநீர் தேக்கத்திலுள்ள அதனை சார்ந்த பகுதிகளில் உள்ள மரங்களின் மேல் மகசூல் பலனை அனுபவிக்கும் உரிம்ம் ஏலம் விடுதல் முதலியவைகளில் இருந்து இந்நகராட்சிக்கு கடந்த மூன்று வருடங்களில் கிடைக்கப்பெற்ற வருமான விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|
| புதிய பேருந்து நிலையத்தில் சைக்கிள் நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 695000 | 729750 | 765238 | 155500 |
| புதிய பேருந்து நிலைய பேருந்து நுழைவு கட்டணம் | 1435819 | 990000 | 1039500 | 1091475 |
| புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை | 571095 | 451000 | 473550 | 497227 |
| ஆடு அடிக்குமிடம் கட்டணம் வசூல் உரிமம் | 83000 | 87150 | 91508 | 96500 |
| கோடை குடிநீர் தேக்கம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் உள்ள மரங்களின் மேல் மகசூல் உரிமம் | 219000 | 229950 | 241448 | 555000 |
| புதிய பேருந்து நிலையத்தில் தலை சுமையாக பால்கோவா, முறுக்கு விற்கும் உரிமம் | 69458 | 69600 | 73080 | 76734 |
| புதிய பேருந்து நிலையத்தில் பூ விற்கும் உரிமம் | 16868 | 16900 | 17745 | 18632 |
| பழைய பேருந்து நிலையத்தில் தலை சுமையாக பால்கோவா, முறுக்கு விற்கும் உரிமம் | 42557 | 42600 | 44730 | - |
| பழைய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் | 218295 | 110000 | 115500 | - |
| பழைய பேருந்து நிலையம் கட்டணம் கழிப்பிடம் | 1130063 | 1302000 | 651000 | - |
| பழைய பேருந்து நிலையம் இருசக்கர வாகன காப்பகம் | 437443 | 400050 | 420052 | 463000 |
| பழைய பேருந்து நிலையம் பூ விற்பனை | 66701 | 22234 | | - |

| | | | | |
|---|---|---|---|---|
| உரிமம் | | | | |
| டி.பி.மில்ஸ் ரோடு கட்டண கழிப்பிடம் வசூல் உரிமம் | 341250 | 358250 | 377000 | 395850 |
| ஆர்.சி.சர்ச் தெரு கட்டண கழிப்பிடம் | 125475 | 131749 | 140000 | 147000 |
| சாலையோரம் மரங்களில் பலன் அனுபவிக்கும் உரிமம் | - | - | - | - |

**(அ) சந்தை**

இந்நகராட்சியால் வாரச் சந்தையோ, தினசரி சந்தையோ நடத்தப்படவில்லை. ஆனால் நகரில் பிரதான இடத்தில் ஏ.கே.டி.தர்மராஜா கல்வி ஸ்தாபனத்தால் நடத்தப்படும் தனியார் வாரச் சந்தை உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இச்சந்தைக்கு நகராட்சிக்கு உரிமம் வழங்கப்படுகிறது.

**(ஆ) வண்டிப்பேட்டை**

நகர் மன்றத்தில் வண்டிப்பேட்டை நிர்வாகிக்கப்படவில்லை. தனியார் வண்டிப்பேட்டைகள் இல்லை.

**(இ)பேருந்து நிலையம்**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தை சேர்ந்தாற் போல் தென்பக்கம் உள்ள இராஜபாளையம் கிராம்ம் சர்வே நம்பர் 265/2 ல் சுமார் 35 சென்ட் ஊரணி புறம் போக்கு நிலத்தை பேருந்து நிலைய அபிவிருத்திற்காக இந்நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்து கொடுக்கும்படி 31.03.76 ஆம் தேதிய 42 எண் தீர்மானத்தின் மூலம் வருவாய்த்துறைக்கு அனுப்பப்பட்டு வருவாய்த்துறை அரசாணை (நிலை) எண் 1589 நாள் 22.08.88ன் படி மேற்படி நிலத்தை 99 வருட குத்தகையாக எடுத்து நகராட்சி அனுபவித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. மேற்படி இடத்தில் புதிதாக சைக்கிள் நிறுத்திமிடம் மற்றும் வணிக வளாகம் ரூ.30 லட்சம் செலவில் கட்டப்பட்டது.

நகர சபையால் பேருந்து நிலையம் ஒன்று நல்ல முறையில் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையத்திற்குள் MUDF திட்டத்தின் கீழ் 34 கடைகள் கட்டப்பட்டுள்ளன. வடக்கு வெளிப்பக்கம் 15 கடைகள் மேல் பக்கம் 3 கடைகள் மற்றும் மாடியில் 1 கடை பொது மக்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கும் விதத்தில் அமைக்கப்பட்டு இருக்கிறது. பழைய பேருந்து நிலையத்தில் போதுமான வசதிகள் செய்ததின் மூலம் 24.02.79 க்கு பின் 'சி' வகுப்பு பேருந்து நிலையமாக உயர்த்தப்பட்டு 21.02.79 ஆம் தேதிய டி.எண் 13729/சி2/70 ஆம் எண்ணிட்ட இராமநாதபுரம் மண்டல போக்குவரத்து அதிகாரி அவர்களின் உத்தரவுப்படி பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்து ஒன்றுக்கு ரூ.2 வீதம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. உள்துறை (போக்குவரத்து VII) அரசாணை எண் 175 நாள் 04.03.2002 ஆணையில் 11.03.2002 முதல் சி கிளாஸ் பேருந்து நிலையங்களில் பேருந்து கட்டணம் ரூ.2 லிருந்து ரூ.8 ஆக உயர்த்தி வசூல் செய்ய ஆணையிட்டுள்ளது. உயர்த்தப்பட்ட கட்டணத்தின்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

பழைய பேருந்து நிலையத்தினை இடித்துவிட்டு புதிதாக கட்டும் பணி 2022-23 ஆம் ஆண்டிற்கான கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ290.00 லட்சம்

மதிப்பீட்டில் 20.01.2023-ம் தேதியில் துவங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பழைய பேருந்து நிலையம் தெற்கு பக்க கடைகள், சைவ உணவு விடுதி இடிக்கப்பட்டுள்ளது. பழைய பேருந்து நிலைய உள்பக்கம் வடக்கு பக்க கடைகள் முடப்பட்டுள்ளது. கேட்புகள் 01.02.2023ம் தேதி முதல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**புதிய புறநகர் பேருந்து நிலையம்**

இராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் தற்பொழுது இயங்கி வரும் பேருந்து நிலையம் நகரின் மையப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமான இடத்தில் அமைந்துள்ளது. எனவே போக்குவரத்து நெரிசலையும் அதனால் ஏற்படும் விபத்துக்களையும் சமாளிக்கும் போது இந்நகரிலிருந்து சங்கரன் கோவில் செல்லும் சாலையில் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ள நகராட்சிக்குப் பாத்தியமான புதுப்பாளையம் கிராமம் சர்வே எண்கள் 273,274ல் உள்ள 7.71 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. புதிய ‘A’ கிளாஸ் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு ரூ.12/- வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

நகரின் தெற்கு எல்லையில் உள்ள நகராட்சி மாட்டுக் கொட்டகையில் ஆடு அடிக்கும் இடம் உள்ளது. அது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. உதவி கால்நடை அதிகாரி ஆடுகளை பரிசோதித்து விற்பனை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அடிக்கப்படும் ஆடு ஒன்றிற்கு கட்டணமாக ரூ.30 வசூல் செய்ய அறிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் ரூ.96500/- வருமானம் கிடைத்துள்ளது.

**(உ) இதர கடைகளும் காலி இடங்களும்**

முடங்கியார் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 6 கடைகள் இடியும் தருவாயில் உள்ளது. அதனை புதுப்பிக்க நகைராட்சி பொறியாளர் பிரிவு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழைய / புதிய பேருந்து நிலைய கடைகள் மூலம் அறிக்கை ஆண்டில் வரவு ரூ.1,23,78,013/- ஆகும்.

நகராட்சியால் கட்டப்பட்ட சத்துணவுக்கூடங்கள் 28ல் 27 சத்துணவுக்கூடங்களும், 1 சத்துணவுக் கூடத்தின் ஒரு பகுதியும் ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து அலவலகத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வரவு ஆகும் ஒரு சத்துணவுக்கூடத்தின் மற்றொரு பகுதி கால்நடை பராமரிப்புத்துறைக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வாடகை வரவு ரூ.3864/- அம்பலப்புளி பஜார் தெற்கு காவல் நிலையம் பின்புறம் உள்ள நகராட்சிக்கு பாத்தியப்பட்ட காலியிடம் குத்தகைக்கு விடப்பட்டு குத்தகைதாரரால் மாத வாடகை செலுத்தப்பட்டு வருகிறது.

**(ஊ) கட்டணக்கழிப்பிடங்கள்**

புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டணக் கழிப்பறைகள் மற்றும் (1) ஆர்.சி.சர்ச் தெரு (2) டி.பி.மில்ஸ் சாலை (3) சார் பதிவாளர் அலுவலகம் அருகில் உள்ள ஆகிய இடங்களில் நகராட்சி கட்டணக்கழிப்பறைகள் பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது. ஜவஹர் மைதானம் கட்டண கழிப்பறை இடிக்கப்பட்டு தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்திற்காக மேல் நிலை தொட்டி கட்டப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் மற்ற கழிப்பறைகளின் மூலம் வரவு 10,60,077/-

பழைய பேருந்து நிலையத்தை இடிக்கப்பட்டு புதியதாக கட்டும் பணி 20.01.2023 முதல் நடைபெறுவதால் பழைய பேருந்து நிலையம் உள்ள கட்டண கழிப்பறை இடிக்கப்பட்டதில் 20.01.2023 கேட்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**(ஏ) தொழில் நிறுவனங்களும், தொழிற்சாலைகளும்**

அறிக்கையாண்டில் சுகாதார அலுவலர்களால் தொழிற் சாலைகளும், தொழில் நிறுவனங்களும் முறையாக பார்வையிடப்பட்டது.

**35. பூங்காக்கள் பராமரித்தல்**

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டுத் திடல் மற்றும் திறந்தவெளி (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 4(2) கீழ் உத்தேச பட்டியலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 139 நாள் 13.10.2016 வாயிலாக பிரிவு 513) கீழ் திருத்தப்பட்டியலும் வெளிடப்பட்டது. சென்ற ஆண்டு நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன்படி பட்டியல் பின்வருமாறு

| வரிசை எண் | பூங்கா / விளையாட்டுத் திடல் / திறந்த வெளியின் பெயர் | டவுண் சர்வே எண், பிளாக் எண் மற்றும் நகரளவு எண் | பரப்பளவு (சதுர மீ) | உரிமையாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி ரேடியோ பூங்கா டி,பி,மில்ஸ் ரோடு | வார்டு H, பிளாக் 9, நகரளவு எண் 14P | 864.29 | நகர்மன்றம் |
| 2 | காந்தி பூங்கா குமரன் தெரு | வார்டு C, பிளாக் 20, நகரளவு எண் 1 | 581.74 | நகர்மன்றம் |
| 3 | பி.எஸ்.குமாரசாமிராஜா பூங்கா தென்காசி ரோடு | வார்டு G, பிளாக் 15, நகரளவு எண் 106 | 246.78 | நகர்மன்றம் |
| 4 | சுபாஸ் சந்திரபோஸ் பூங்கா முடங்கியார் ரோடு | வார்டு A, பிளாக் 8, நகரளவு எண் 81 | 828.51 | நகர்மன்றம் |
| 5 | புதுப்பாளையம் பூங்கா 1 புதுப்பாளையம் | வார்டு E, பிளாக் 13, நகரளவு எண் 66 | 635.00 | P.S.குமாரசாமி ராஜா மற்றும் சிலர் |
| 6 | புதுப்பாளையம் பூங்கா 2 புதுப்பாளையம் | வார்டு E, பிளாக் 20, நகரளவு எண் 84,85 | 810.00 | தனியார்(M.A.N.R) |
| 7 | புதுப்பாளையம் பூங்கா 3 புதுப்பாளையம் | வார்டு O, பிளாக் 14, நகரளவு எண் 1, வார்டு D, பிளாக் 13, நகரளவு எண் 34 | 1621.78 | K.S.குருசாமிராஜா |
| 8 | ஆர்.ஆர்.நகர் பூங்கா எண் 1 ஆர்.ஆர்.நகர் | வார்டு J, பிளாக் 6, நகரளவு எண் 87 | 666.50 | நகர்மன்றம் |
| 9 | ஆர்.ஆர்.நகர் பூங்கா எண் 2 | வார்டு J, பிளாக் 6, நகரளவு எண் 17 | 687.20 | நகர்மன்றம் |
| 10 | ஆர்.ஆர்.நகர் பூங்கா எண் 3 | வார்டு J, பிளாக் 6, நகரளவு எண் 44 | 438.50 | நகர்மன்றம் |
| 11 | ஆர்.ஆர்.நகர் பூங்கா எண் 4 | வார்டு J, பிளாக் 6, நகரளவு எண் 85 | 381.98 | நகர்மன்றம் |
| 12 | தமிழ்நாடு விட்டுவசதி வாரியம் குடியிருப்பு சத்திரப்பட்டி ரோடு | வார்டு I, பிளாக் 19, நகரளவு எண் 160 | 891.00 | நகர்மன்றம் |
| 13 | ஆர்.ஆர்.நகர் கூடுதல் | வார்டு J, பிளாக் 7, | 631.85 | நகர்மன்றம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி பூங்கா எண் 4 | நகரளவு எண் 114/1A,A1 | | |
| 14 | கணபதியாபுரம் பூங்கா ஸ்ரீ ரெங்கபாளையம் | வார்டு I, பிளாக் 17, நகரளவு எண் 18/1A,A | 632.00 | நகர்மன்றம் |
| விளையாட்டுத்திடல் | | | | |
| 1 | எஸ்.எம்.உயர்நிலைப்பள்ளி | வார்டு G, பிளாக் 1, நகரளவு எண் 32/1604 | 20251.93 | சேத்தூர் சேவக பாண்டியன் அரசு மேல்நிலைப் பள்ளி |
| 2 | ஏ.கே.டி.தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி | வார்டு G, பிளாக் 1, நகரளவு எண் 34 | 916.65 | ஏ.கே.டி.தர்மராஜா கல்வி அறக்கட்டளை |
| 3 | நாடார் மேல்நிலைப்பள்ளி | வார்டு F, பிளாக் 12, நகரளவு எண் 13 | 647.50 | தலைவர் நாடார் மேல்நிலைப்பள்ளி |
| 4 | பி.ஏ.சி.எம். மேல்நிலைப்பள்ளி | வார்டு I, பிளாக் 12, நகரளவு எண் 16 | 21182.87 | பி.ஆர்.ராமசுப்பிரமணியராஜா பி.எஸ்.கே.நகர் |
| 5 | எஸ்.எஸ்.மேல்நிலைப்பள்ளி | வார்டு H, பிளாக் 22, நகரளவு எண் 16 | 9080.90 | சேத்தூர் சேவக பாண்டியன் அரசு மேல்நிலைப்பள்ளி |
| 6 | ரயில்வே கிழக்குத் பக்கம் | வார்டு H, பிளாக் 222, நகரளவு எண் 58 to 68 | 9415.82 | பெருமாள் செட்டி மற்றும் சிலர் |
| 7 | புதுப்பாளையம் திட்டம் 1 | வார்டு E, பிளாக் 24, நகரளவு எண் 288 to 293 | 12669.41 | P.S.குமாரசாமி ராஜா மற்றும் சிலர் |
| திறந்த வெளி | | | | |
| 1 | சுபாஷ்சந்திரபோஸ் மைதானம் | வார்டு A, பிளாக் 2, நகரளவு எண் 2P,B நகரளவு எண் 4,5 | 45996.17 | அரசு |
| 2 | ஜவஹர் மைதானம் | வார்டு E, பிளாக் 2, நகரளவு எண் 2 | 5298.47 | அரசு |
| 3 | பொன்விழா மைதானம் | வார்டு C, பிளாக் 22, நகரளவு எண் 20 | 1357.00 | எஸ்.என்.நாராயண ராஜா, செயலர், காந்தி கலைமன்றம் |
| 4 | பண்ணையார் கிளப் | வார்டு D, பிளாக் 3, நகரளவு எண் 62/1 | 687.48 | ஆர்.வி.ராமசுந்தரம் பிள்ளை, பண்ணையார் |
| 5 | ராம்கோ கிளப் மைதானம் | வார்டு G, பிளாக் 7, நகரளவு எண் 32 | 352.56 | பி.எஸ்.ராமசுப்பிரமணிய ராஜா |

**36.நில மேம்பாடு**

**(அ) நகரமைப்பு சட்டம்**

நகர் ஊரமைப்புத்துறையினரால் Single LPA-க்கு வணிக கட்டிடங்கள் 2000 சதுர அடி வரையிலும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 10000 சதுர அடி வரையிலும் திட்ட அனுமதி வழங்க நகர் ஊரமைப்பு துறையினரால் Delegation வழங்கப்பட்டுள்ளதான்படி நகராட்சி ஆணையாளர் அவர்களால் திட்ட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. 01.04.2023 முதல் 23.02.2024 வரை திரு.பி.மதியழகன் நகர திட்டமிடுநராக பணியாற்றி வந்தார். திருமதி.பா.செல்வலட்சுமி 01.04.2023 முதல் 31.03.2024 வரையிலும் நகரமைப்பு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வந்தார். மேலும் உதவியாளரும் தொடர்ந்து பணியாற்றினார்கள்.

01-04-2023 **முதல்** 31-03-2024 **வரை**.

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நகரமைப்பு அலுவலர் நிலை I | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறை ஆணை எண் ந.க.66582/89/டிபி1 நாள் 11.03.91 | 1 |
| 2 | நகரமைப்பு ஆய்வர் | சுகாதாரத்துறை அரசாணை எண் 3450 நாள் 26.01.1956 | 2 |

எனினும் அறிக்கை ஆண்டில் அரசாணை ( நிலை ) எண்:**10,** நாள்:**23–01–2023–**ன்படி சிறப்பு நிலை நகராட்சியான இராஜபாளையம் நகராட்சிக்கு பின்வருமாறு பணியிடங்கள் வரையறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**<u>நகரமைப்புப்பிரிவு</u>**

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதுநிலை நகரமைப்பு அலுவலர் / செயற்பொறியாளர் திட்டம் | 1 |
| 2 | நகரமைப்பு ஆய்வாளர் | 3 |

இந்நகராட்சயில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 7 அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்களும் 6 வரைவு நிலையில் உள்ள விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளது. அரசினரால் ஏற்கனவே இந்நகருக்கு அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டம் தற்பொழுது புதுநிலைப்படுத்தப்பட்டு அரசின் இறுதி ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>I.அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள்</u>

**<u>1. இரயில்வே நிலையப் பகுதி நகரமைப்பு திட்டங்கள்</u>**

இத்திட்டமானது இருப்புப் பாதைக்கு மேற்கும் தென்காசி சாலைக்கு கிழக்கும் டி.பி.மில்ஸ் சாலைக்கு தென்புறம் அசோக் திரையரங்குக்கு வடக்கே உள்ள பகுதியில் அமைந்துள்ளது. பொது சுகாதாரப்பிரிவு அரசாணை எண் 50 நாள் 01.01.1932ல் அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. சுகாதார துறை அரசாணை எண் 1756 நாள் 12.11.1940ன்படி இத்திட்டத்திற்கு திருத்தங்கள் பிறப்பித்த பின்னர் சுகாதார துறை அரசாணை எண் 302 நாள் 29.08.1960 பிரகாரம் மேற்படி திருத்தங்களை உறுதி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. பின் அரசு தனது 25.07.69 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண் 1314ல் பெரு வாரியாக சாலைகளை பொதுக் தெருவாக பிரகடனபடுத்தியுள்ளது. தற்பொழுது இடத்திலுள்ள கட்டிடங்களின் வளர்ச்சிக்கேற்ப திட்டத்தை புதுநிலைப்படுத்தும் பணிகள் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது(கு.2.7243.99)

**2.இரயில்வே நிலையம் பகுதி இருப்புப் பாதைக்கு கீழ்புறம் உள்ள நகரமைப்புத் திட்டம்**

இத்திட்டப்பகுதி இருப்புப்பாதைக்கு கீழ்புறம் வட எல்லைக்கு தென்புறமும் சஞ்சீவிமலைக்கு மேல்புறமும் சத்திரப்பட்டி சாலைக்கு வடபுறமும் அமைந்துள்ள பகுதியாகும். இத்திட்டம் 18.6.59 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி உள்ளாட்சி துறை அரசாணை எண் 2041 படி அரசினரால் அங்கீகாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உள்ள ஏஏ, சிசி, மற்றும் எச்எச் சாலை நகர்மன்றத்தால் அமைக்க வேண்டிய சாலைகள் ஆகும். பிபி சாலை ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது. சாலை இன்னும் அமைக்கப்பெறவில்லை. ஏஏ சாலையில் தெற்கே சத்திரப்பட்டி சாலையிலிருந்து வடக்கு மலையடிப்பட்டி பொது தெருவாக பிரகடனப்படுத்தப்பட்டு நகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது. சிசி சாலை நகராட்சியால் சத்திரப்பட்டி சாலையிலிருந்து வடபக்கம் டி.பி.மில்ஸ் ரோடு வரை அமைக்கப்பட்டு விட்டது. எச்எச் சாலையும் அமைக்கப்பட்டு விட்டது. இதர தனியரால் அமைக்கப்பட வேண்டிய சாலைகள் கட்டிட மனையாக உபயோகிக்க உட்படும் போது மனை உரிமையாளர்களால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 60 அடி அகல திட்டச்சாலை தற்போது நகர்மன்றத்தால் உலக வங்கி நிதி உதவியுடன் தார்ச்சாலையாக மாற்றி அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் அமையும் 60 அடி அகல ஏஏ சாலை மற்றும் 40 அடி அகல சிசி தார் சாலையாக அமைக்கும் பணிகள் முடிவடைந்துவிட்டது. தற்போது இடத்திலுள்ள கட்டிடங்களின் வளர்ச்சிகேற்ப திட்டத்தை புதுநிலைப்படுத்தும் பணிகள் நகர் ஊரமைப்புத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3. புதுப்பாளையம் நகரமைப்புத் திட்டம் எண் I**

இத்திட்டத்தின் பரப்பளவு 108.34 ஹெக்டேர் ஆகும். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 08.01.1981ம் தேதிய ந.க.எண் 4017/80/டி2 செயலாணை கடிதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு 11 வருடங்களுக்கு மேலாகி விட்டபடியால் தற்பொழுது இத்திட்டத்தில் நில உபயோகத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. எனவே, தற்போது உள்ள வளர்ச்சியின் அடிப்படையில் புது நிலைப்படுத்த இந்நகர் மன்ற உள்ளுர் திட்டக்குழு தீர்மான எண் 19 நாள் 09.02.2000படி 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 27 மற்றும் 33(1) மற்றும் (3) படி மறு ஆய்வு செய்து புது நிலைப்படுத்த நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் II**

இத்திட்டத்தின் பரப்பளவு 19.45 ஹெக்டேர் ஆகும். அரசு தனது 15.12.69 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 2466 கீழ் இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு நீண்ட காலமாகி விட்டபடியால் தற்பொழுது இடத்திலுள்ள நில உபயோக மாற்றங்களின் அடிப்படையில் புதுநிலைப்படுத்தும் பணிகள் நகர் ஊரமைப்புத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (கோப்பு எண் 322/96)

**5.புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் III**

இத்திட்டத்தின் பரப்பளவு 14.45 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டபடியால் தற்பொழுது இடத்திலுள்ள வளர்ச்சிக்கேற்ப உள்ளுர் திட்டக்குழு தீர்மான எண் 781 நாள் 27.5.2003 படி ஓட்டு மொத்த

திட்ட மாறுதலுக்கு ஒப்புதல் அளித்திடக் கோரி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தமது 20.10.2003 ஆம் தேதிய செயலாணை கடிதத்தில் ஒட்டு மொத்த திட்ட மாறுதலுக்காக ஒப்புதல் அளித்துள்ளதை அன்று பாகம் ஏஐ பிரிவு 1 பக்கம் 46ல் பிரசுரம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை செயல்முறை உத்திரவு ந.க.எண் 19469-01டிபி2 நாள் 20.10.03 இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**6.பழையபாளையம் அபிவிருத்தி திட்டம்**

இத்திட்டத்தின் பரப்பளவு 24.17 ஹெக்டேர் ஆகும். இத்திட்டமானது நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 31.12.86 ம். தேதிய ந.க.எண் 32458/86 செயலாணையில் அங்கீகாரம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நீண்ட காலம் ஆகிவிட்டபடியால் தற்பொழுது இடத்திலுள்ள வளர்ச்சிகேற்ப உள்ளூர் திட்டக்குழு தீர்மான எண் 196 நாள் 07.05.99 படி ஒட்டு மொத்த திட்ட மாறுதலுக்கு ஒப்புதல் அளித்திடக்கோரி சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தமது 07.03.2000 தேதிய ந.க.எண் 24600/99டிபி2 கடிதத்தில் கோரிய விபரங்களுக்கு நகராட்சியால் பி2/எப்1/2423/99 பதில் சமர்ப்பிக்கப்பட்டு இயக்குநர் அவர்களின் 25.05.2001 ஆம் தேதிய ஒப்புதல் அளித்து உத்திரவு படிவம் 14 ஐ (Notification) 06.11.2003 அன்று ஒட்டி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஆட்சேபனை ஏதும் வரப்பெறததால் அரசின் இறுதி ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அதன் பேரில் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் 30.01.08ம் தேதிய ந.க.எண் 13505/03 ஷீ 2 எண் செயல்முறை உத்திரவுப்படி ஒட்டு மொத்த திட்ட மாற்ற இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற்படி உத்திரவினை விருதுநகர் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் வருகிறது.

**7.விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் VI**

இந்த இடமானது சங்கரன்கோவில் சாலைக்கு தெற்கேயும் மேற்கேயும் புதுப்பாளையம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 1ல் வடபுறம் தென்காசி சாலைக்கு கிழக்கேயும் அமைந்த பகுதியாகும். இதன் பரப்பளவு 24.895 ஹெக்டேராகும். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது 06.11.92 தேதிய செயலாணை எண் 26876ல் பிரசுரம் செய்துள்ளார். நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின் படி மறு பிரசுரம் செய்யப்பட்டு விட்டது. இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கால வரம்பு 31.03.93 வரை நீடித்து வழங்கப்பட்டது. கால வரம்பு நீடிப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் 12.08.89ம் தேதிய 1595/89 ல் பதிவு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் தனது 14.08.89 ஆம் தேதிய ந.க.எண் 2685/89 கடிதத்தில் வரைபடம் எண் 2 தயார் செய்து அனுப்பியுள்ளார்கள். நிலம் மற்றும் கட்டிடம் உரிமையாளர்களின் கூட்டம் 22.12.89 அன்று நடைபெற்றது. ஆலோசனைகள் பெறப்பட்டு உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண் 148 படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாற்றங்கள் மேற்கொள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் 13.05.91 ஆம் தேதிய ந.க.எண் 33338/89/டி.பி கடிதத்தில் இத்திட்டத்திற்கு சட்டப்பிரிவு 25ன் கீழ் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மேற்படி விபரங்களை ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளுக்காக விதி 13ன்படி தமிழ்நாடு அரசிதழில் பாகம் 4 பிரிவு 1, பக்கம் 1030ல் 16.12.91 அன்று பிரசுரம் செய்யப்பட்டு எவ்வித

ஆட்சேபனையும் உரிய காலத்தில் வராததால் சட்டப்பிரிவு 28ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இறுதி உத்தரவு பெற 09.03.92ம் தேதிய உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் 218ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விதி 13ன்படியாக அறிவிப்புகள் 31.03.92 ஆம் தேதிய நாளிதழிலும் அனைத்து துறைத் தலைவர் அலுவலகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது. மேற்படி திட்டமானது திட்ட விதி (1)ன் படியும் திட்டப்பிரிவு 29ன்படியும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ந.க.எண் 53338/டிபி2 நாள் 27.11.94படி இறுதி அங்கீகாரம் பெறப்பட்டு மாநில மற்றும் மாவட்டம் அரசிதழ்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. திட்ட உத்தேசத்திற்கேற்ப இடத்தில் வளர்ச்சியடைந்து வருகிறது.

I" வரைவு நிலையில் உள்ள விரிவு அபிவிருத்தித் திட்டம்"

II விரிவு அபிவிருத்தி திட்டம் எண் I (வரைவு நிலை)

இத்திட்டம் நகராட்சியில் வடபுற எல்லைக்கு தெற்கேயும் சர்வே எண் 24ல் உள்ள ஓடைக்கு வடபுறம் மதுரை சாலைக்கு மேற்கேயும் சர்வே எண் 65ல் உள்ள ஓடைக்கு கிழக்கேயும் அமைந்த பகுதியாகும். இதன் பரப்பளவு 36.6090 ஹெக்டேர் ஆகும். நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் 06.11.82 தேதிய செயலாணை எண் 26876/82 படி பிரசுரம் செய்யப்பட்டது. நகர் ஊரமைப்பு திட்ட விதிகளின்படி மறு பிரசுரம் செய்யப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கால வரம்பு 01.03.93 வரை நீடித்து வழங்கப்பட்டது. கால வரம்பு நீடிப்பு பதிவு செய்யப்பட்டதுடன் மாவட்ட அரசிதழில் 26.08.89 அன்று மறு பிரசுரம் செய்யப்பட்டு நகர ஊரமைப்பு துணை ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் திட்டப்பகுதிக்கு 23.03.89 அன்று வரைபடம் எண் 2 தயாரித்து அனுப்பியதின் பேரில் நிலம் மற்றும் கட்டிட உரிமையாளர்களின் கூட்டம் 20.09.89 அன்று கூட்டப்பட்டு ஆலோசனை பெறப்பட்டது. அதனை உள்ளூர் திட்டக்குழு தனது 28.11.89 ஆம் தேதிய 135 ஆம் எண் தீர்மானத்தில் அங்கீகரித்துள்ளது. மேற்படி பகுதிக்குரிய அட்டவணை 13.12.89 ஆம் தேதிய எப்1/6163/89 எண் கடிதத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

மதுரை நகரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் 03.01.90 ஆம் தேதிய 5859/89 ஆம் எண் கடிதத்தில் விதி எண் 11 படி நகரமைப்பு இயக்குநரின் இசைவு கூறும் தீர்மானத்துடன் அனுப்பிவைக்கும்படி தெரிவித்துள்ளார்கள். உள்ளூர் திட்டக்குழு தனது 06.04.90 ஆம் தேதிய 154 ஆம் எண் தீர்மானத்தில் அட்டவணையில் திருத்தம் செய்ய தீர்மானித்துள்ளது. விதி 11 கீழ் இசைவு பெற கோரும் உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண் 160 நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு இவ்வலுவலக 6.6.90 ஆம் தேதிய ந.க.எண் 669/89 ஆம் எண் கடிதத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. முழுமை திட்டத்தில் இத்திட்டத்தின்படி மாற்றங்கள் செய்ய வேண்டி உள்ளதற்கு முறையே 30.10.90 மற்றும் 30.11.90 ஆம் தேதியில் உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண் 171 மற்றும் 183 நிறைவேற்றி 03.12.90 அன்று நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர் இத்திட்டத்திற்கு நாளது தேதி வரை இணக்கம் அளிக்கவில்லை. நினைவூட்டுதல் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

2. விரிவு அபிவிருத்தி திட்டம் எண் II (வரைவு நிலை)

இத்திட்டமானது நகராட்சியின் எல்லைக்கு தென்புறமும் மாடசாமி கோவில் தெருவிற்கு வடக்கேயும், மதுரை சாலைக்கு மேற்கேயும் அழகுதேவன் குளம் சாலைக்கு கிழக்கேயும்

அமைந்துள்ள பகுதியாகும். அதன் பரப்பளவு 24.2329 ஹெக்டேர் ஆகும். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது 08.11.92 ஆம் தேதிய செயல்முறை ஆணை எண் 26875/82 படி பிரசுரம் செய்துள்ளார்கள். நகர் ஊரமைப்பு திட்ட விதிகளின்படி (கோப்பு எண் 15026/82 மறு பிரசுரம் செய்யப்பட்டு விட்டது. இத்திட்டத்திற்கான கால வரம்பு 31.03.93 வரை நீடிக்கப்பட்டு கால வரம்பு நீட்டிப்பு பதிவு செய்யப்பட்ட உடன் 26.08.89 ஆம் தேதிய மாவட்ட அரசு இதழ்களிலும் மறுபிரசுரம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு விட்டது. மதுரை இணை இயக்குநர் அவர்கள் மேற்படி திட்டப்பகுதிக்கு 23.03.89 ஆம் தேதிய 1161 எண் கடிதத்தில் வரைபடம் எண் 1 தயார் செய்தும், 28.07.89 ஆம் தேதிய வரைபடம் எண் 2ம் தயார் செய்தும், அனுப்பியதின் பேரில் நலம், கட்டிடம் சொந்தக்காரர்களின் கூட்டம் 26.12.89 அன்று நடத்தப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டது. ஆலோசனை மற்றும் ஆடசேபனைகள் உள்ளூர் திட்டக்குழு முன் வைக்கப்பட்டது. உள்ளூர் திட்டக்குழு தனது 11.1.90 ஆம் தேதிய 14ஏ எண் தீர்மானத்தின் அட்டவணையில் கூறியபடி ஏற்றுக் கொள்வதாக தீர்மானத்துள்ளதை மதுரை துணை நகரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. திட்ட வரைபடத்தின் படி முழுமை திட்டத்தில் மாற்றங்கள் செய்ய உள்ளூர் திட்டக் குழும்ம் தனது 30.10.90 ஆம் தேதிய 172 எண் தீர்மானத்துடன் நகர் ஊரமைப்புத் இயக்குநர் அவர்களுக்கு 16.10.90 ஆம் தேதிய கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்கள் 29.11.96 ஆம் தேதிய 4615/96 எண் கடிதத்தில் மாற்றம் செய்ய அரசுக்கு உத்தேசம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது என்றும் அரசிடமிருந்து விபரம் பெறப்பட்ட பின்னர் இத்திட்டத்திற்கு இணக்கம் அளிப்பது சம்மந்தமாக பரிசீலிக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3. விரிவு அபிவிருத்தி திட்டம் எண் III (வரைவு நிலை)</u>**

இந்த திட்டப்பகுதியானது மாடசாமி கோவில் தெருவிற்கு தெற்கேயும், புகைவண்டி நிலையப் பகுதி நகரமைப்பு திட்டத்திற்கு மேற்கேயும், முடங்கியார் சாலைக்கு வடக்கே மாணிக்கத்தான் கிணறு தெருவிற்கு கிழக்கேயும் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 74.301 ஹெக்டேர் ஆகும். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது 06.11.82 ஆம் தேதிய 26875/82 எண் செயலாணையில் பிரசுரம் செய்துள்ளார்கள். நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி (கோப்பு எண் 18026/82) மறு பிரசுரம் செய்யப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கால வரம்பு 31.03.93 வரை நீடித்து வழங்கப்பட்டு உள்ளது. கால வரம்பு நீடிப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் 12.08.1989 ஆம் தேதியில் பதிவு எண் 1585/89 படி பதிவு செய்யப்பட்டும் மதுரை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் இத்திட்டப் பகுதிக்கு வரைபடம் நிலை 2 அனுப்பி உள்ளார்கள். அதன் பேரில் நில சுவான்தார்கள் கூட்டம் 24.01.91 அன்று (உள்ளூர் திட்டக்குழு தனது தீர்மானம் எண் 151 நாள் 30.11.90 தீர்மானத்து) கூட்டம் நடத்தப்பட்டு ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு பரிசீலித்து மேற்படி விபரங்கள் உடன் விதி 11ன் கீழ் இயக்குநர் அங்கீகாரம் பெற 01.02.91 ஆம் தேதிய 134 ஆம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இசைவு பெற இவ்வலுவலக 12.02.91 ஆம் தேதிய ந.க.எண் 4606/90 எண் கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. திட்டவரைபடம் முழுமை திட்டத்தில் மாற்றம் அரசைக் கேட்டுக் கொள்ள உள்ளூர் திட்டக்குழு 05.02.91 ஆம் தேதிய 202 ஆம் எண் தீர்மானத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு உள்ளது. உத்தரவு எதிர்நோக்கப்படுகிறது.

**4.விரிவு அபிவிருத்தி திட்டம் எண் IV (வரைவு நிலை)**

இந்த திட்டப்பகுதியானது முடங்கியார் சாலைக்கு தெற்கேயும், புதுப்பாளையம் நகரமைப்புத் திட்டம் எண் 2க்கு வடபுறமும் தென்காசி சாலைக்கு மேற்கேயும் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 18.4744 ஹெக்டேர் ஆகும். நகர் ஊரமைப்பு இயக்குநரின் 06.12.89 ஆம் தேதிய நடவடிக்கை எண் 26875/82 படி பிரசுரம் செய்யப்பட்டுவிட்டது. நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி மறு பிரசுரம் செய்யப்பட்டுவிட்டது. இத்திட்டத்திற்கு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் மாவட்ட அரசு இதழ்களில் மறு பிரசுரம் செய்யப்பட்டு நகரமைப்பு இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் மேற்படி பிரசுரத்திற்கு 28.07.89 ஆம் தேதிய 12.03.89 ஆம் எண் கடிதத்தில் வரைபடம் எண் 2 தயார் செய்து அனுப்பியுள்ளார்கள். நிலம் மற்றும் கட்டிட உரிமையாளர்களின் கூட்டம் 22.09.89 அன்று நடைபெற்றது. ஆலோசனைகள் பெறப்பட்டு உள்ளூர் திட்டக் குழுவின் முன் முடிவுக்கு வைக்கப்பட்டது. உள்ளூர் திட்டக்குழு தனது 16.04.90 ஆம் தேதிய 157 ஆம் எண் தீர்மானத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநரின் அங்கீகாரம் பெற தீர்மானித்து மேற்படி ஆலோசனை பட்டியல் இவ்வலுவலக 02.05.90 ஆம் தேதிய ந.க.எண் 10428/89 ஆம் எண் கடிதத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. துணை நகரமைப்பு இயக்குநர் அறிவுரையின் பேரில் உள்ளூர் திட்டக்குழுவின் 30.10.90 ஆம் தேதிய 173 ஆம் தீர்மானத்தின்படி நகர் ஊரமைப்பு இயக்குநரின் இசைவு கோரி கருத்துரு அனுப்பப்பட்டது. மதுரை துணை நகர் இயக்குநர் அவர்கள் தனது 07.01.91 ஆம் தேதிய 5858/89 ஆம் கடிதத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு இசைவு பெற அனுப்பியுள்ளார்கள். மேலே கண்ட திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள முழுமைத்திட்டம் புதுநிலைப்படுத்தப்பட்ட பின்னரே விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 4 மீதான இசைவிற்கு சமர்ப்பிக்கப்படுமென நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்கள் தெரிவித்துள்ளதாக ந.க.எண் 24981/96டிபி2 நாள் 05.06.97 ஆம் தேதிய கடிதத்தில்
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**4.விரிவு அபிவிருத்தி திட்டம் எண் V (வரைவு நிலை)**

இந்த திட்டப்பகுதியானது புகைவண்டி நிலைய நகரமைப்புத்திட்டத்திற்கு தெற்கேயும் இருப்புப் பாதைக்கு புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் 3க்கு மேற்கேயும் சத்திரப்பட்டி சாலைக்கு வடக்கேயும் தென்காசி சாலைக்கு கிழக்கேயும் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 52.136 ஹெக்டேர் ஆகும். இதனை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது 06.11.82 ஆம் தேதிய செயலாணை எண் 26875/82 படி பிரசுரம் செய்து உள்ளார்கள். நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி மறு பிரசுரம் செய்யப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கால வரம்பு 31.01.93 வரை நீடித்து வழங்கப்பட்டது. கால வரம்பு நீடிப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் 12.08.89 ஆம் தேதிய பதிவு எண் 1582/82ன்படி பதிவு செய்யப்பட்டும் 26.08.89 ஆம் தேதிய எண்ணிட்ட அரசிதழ்களிலும் மறு பிரசுரம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண் 7305/95 டிபி2 நாள் 05.06.97 கடிதத்தில் மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 25 கீழ் கிடைப்பதற்குத் தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொண்டுள்ளது.

**6.ஆண்டாள்புரம் நகரமைப்பு திட்டம் (வரைவு நிலை)**

இத்திட்டமானது நகராட்சி எல்லைக்கு தெற்கு, மேற்கு, வடக்கு இராஜபாளையம் மில்ஸ் கிழக்கேயும் அமைந்த பகுதியாகும். இதன் பரப்பளவு 59.07 ஹெக்டேராகும். இதனை உள்ளூர்

திட்டக்குழு தனது 03.07.89 ஆம் தேதிய 128 எண் தீர்மானத்தில் திட்டப்பகுதியாக பிரகடனப்படுத்த தீர்மானித்துள்ளது. நகரமைப்பு சட்ட விதிகளின் படி இத்திட்டம் மாவட்ட அரசிதழில் 26.08.90 அன்று பிரசுரிக்கப்பட்டு சார் பதிவாளர் அலுவலகத்தில் 23.09.89 அன்று பதிவு எண் 2585/89 ஆக பதிவு செய்யப்பட்டு உள்ளது. நில உரிமையாளர்களின் கூட்டம் 29.06.90 அன்று நடத்தப்பட்டு ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு ஆட்சேபனை ஆலோசனைகளின் பேரில் 23.07.90 ஆம் தேதிய உள்ளூர் திட்டக்குழு தீர்மான எண் 164 நிறைவேற்றப்பட்டு இவ்வலுவலக 30.07.90 ஆம் தேதிய ந.க.எண் 4287/90 கடிதத்தின்படி விதி 11 கீழ் இசைவு பெற நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. முழுமைத்திட்டம் புதுநிலைப்படுத்தப்பட்ட பின்னர் இணக்கத்திற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

**<u>III முழுமைத்திட்டம்</u>**

அரசாணை எண் 822 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 24.05.83 படி இராஜபாளையம் உள்ளூர் திட்டக் குழுமம் பகுதிக்கான முழுமைத்திட்டம் 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவின் படி முழுமைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் விதி 5ன் படியும் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் முழுமைத்திட்டம் பரப்பில் நில உபயோகத்தில் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இதன் பேரில் நகர் ஊரமைப்புச்சட்ட 1971 பிரிவு 32(2) படியும் முழுமைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் விதி 5 படியும் முழுமைத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்பு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அதனை புது நிலைப்படுத்த வேண்டும் என்ற விதிமுறையின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்ட திருத்திய முழுமைத்திட்டத்திற்கு அரசின் இசைவு பெற நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 24(2) படியும் முழுமைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் விதி 5 படியும் உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண் 122 நாள் 29.09.98ன் படி முழுமைத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு அரசின் இசைவு பெற 30.12.98ல் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை மண்டலம் துணை நகர் ஊரமைப்பு இயக்குநர், மதுரை வழியாக அரசுச் செயலாளர் நகர்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதித்துறை, சென்னைக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதில் அரசு தமது 18.08.99 ஆம் தேதிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ஆணை எண் 355ல் நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 24/2ன்படி இசைவு அளித்துள்ளது. அரசால் இணக்கம் அளிக்கப்பட்ட முழுமைத்திட்டம் தொடர்பான அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் பக்கம் எண் 109 Part VI Section 1ல் 29.03.2000 அன்று பிரசுரம் செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**<u>(அ) வரைகடப்புகள்</u>**

அறிக்கையாண்டில் ஆணையாளரால் ஆக்கிரமிப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 09.12.98 ஆம் தேதிய நேர்முகத் கடிதம் எண் 18951/987/டிபி9ல் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள் மற்றும் சாலைகளில் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகள் அனைத்தும் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து அகற்றப்பட்டு வருகிறது. எனவே இந்த நிதியாண்டில் தற்காலிக ஆக்கிரமிப்புக் கட்டணம் எதுவும் வசூல் செய்யப்படவில்லை.

**<u>(ஆ) சாலை ஓர கடைகள்</u>**

இந்நகராட்சியின் பொறுப்பிலுள்ள சாலைகளின் ஓரங்களில் 22 பெட்டிக்கடைகள் (Bunks) வைக்கப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டு குத்தகை புதுப்பித்து வரப்படுகின்றது. அறிக்கையாண்டில் இவற்றின் மூலம் வரவு ரூ.186270/- ஆகும். சென்ற ஆண்டு வரவு ரூ.186270 ஆகும்.

**(இ) ஆக்கிரமிப்புகள்**

அறிக்கையாண்டில் தற்காலிக ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு அவ்வப்போது அகற்றப்பட்டு வருகிறது.

**37 இதர வருவாய் இனம்**

**விளம்பர வரி**

தமிழ்நாடு நகரப்பகுதியில் நகராட்சி மற்றும் தனியார் இடங்களில் செய்யப்படும் விளம்பரங்களுக்கு உள்ளாட்சி நிர்வாகத்தால் விளம்பர வரிவசூல் செய்வது மற்றும் உரிமையாணை வழங்குவது தொடர்பாக 05.08.98 ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 141ம் எண்ணிட்ட அரசாணையின் படியும் நகராட்சி நிர்வாக ஆணையரின் 17.9.98ம் தேதிய ந.க.எ 43176/98/டிபி3 எண் கடிதத்தின் படியும் இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு, நகராட்சி மற்றும் தனியார் இடங்களில் செய்யப்படும் விளம்பரங்களுக்கு விளம்பரவரி மன்றத்தீர்மானம் எண் 728 நாள் 10.09.98 ல் நிர்ணயம் செய்யப்பட்டு, விளம்பர அறிக்கையினை மாவட்ட அரசிதழில் 26.08.99ம் தேதிய எண் 8 பக்கம் 101ல் பிரசுரம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அ.ஆ.எண் 47(ம) 48 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 26.7.03 நகராட்சிகளில் விளம்பர பலகைகளுக்கு உரிமை வழங்குவதற்கான அதிகாரம் நகராட்சி ஆணையாளர் அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அரசாணையின் படி வசூல் செய்வதற்கு ஏதுவாக பட்டியல் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் விளம்பரக் கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை.

## VI பொது வருவாய்

**38.வருவாய் கணக்கு**

நகர் மன்ற தீர்மானம் எண் 290 நாள் 1.10.1999 முதல் கட்டடங்களுக்கு ஆண்டு மதிப்பின் பேரில் விதிக்கப்படும் சொத்து வரி 15 சதவீதத்திலிருந்து 21 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அதன் பின் பொது மக்களின் கோக்கையை ஏற்று 24.7.2000 தேதிய நகர் மன்ற தீர்மான எண் 238 படி 21 சதவீதத்திலிருந்து 19 சதவீதமாக குறைக்கப்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 25.9.2000 தேதிய அரசானை எண் 133ல் அனுமதி பெறப்பட்டது.

1 பொது வகை கரரியம் 8%

2 குடிநீர் மற்றும் வடிகால் 6%

3 துப்புரவுப் பணி 2%

4 விளக்கு 2%

5 கல்வி வரி 1%

மொத்தம் 19%

அறிக்கையாண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் ரூ 2429.08 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

39 நிகழ்வு (Incidence)

சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 52342 ஆகும். இதில் 44817 குடியிருப்பு ஆகும். 6479 வணிகக் கட்டிடங்கள். 1029 தொழில் சாலைகளும் 410 அரசு வரி விதிப்புகளும் ஆகும். அனைத்து இனங்களுக்கும் சேர்த்து நடப்பு ஆண்டு சொத்து வரி விதிக்கப்பட்டதில் கேட்புத் தொகை ரூ. 1424.19 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு நடப்பு கேட்பு கேட்புத் தொகை ரூ. 1535.84 லட்சம் ஆகும். அறிக்கையாண்டில் புதிய வரி விதிப்புகளின் எண்ணிக்கை 730 காலிமனை வரி விதிப்புகளின் எண்ணிக்கை 169 ஆகும். காலிமனை வரி நடப்பு கேட்பு ரூ.29.77 லட்சம் ஆகும்.

நடப்பு ஆண்டு தொழில் வரி விதிக்கப்பட்ட வணிகர்களின் எண்ணிக்கை 1781 அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் எண்ணிக்கை 189 நடப்பு ஆண்டு தொழில் வரி கேட்பு ரூ.120.22 லட்சம் ஆகும். பணியாளர்களிடம் இருந்து மொத்தம் வசூல் ரூ.11.52 லட்சம் நிறுவனங்களிடமிருந்து மொத்தம் வசூல் ரூ. 100.49 இலட்சம் ஆகும்.

**40. கேட்பு வசூல் நிலுவை**

| விபரம் | கேட்பு ரூ லட்சத்தில் | வசூல் ரூ லட்சத்தில் | நிலுவை ரூ லட்சத்தில் | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 1986.22 | 1778.01 | 208.21 | 89.52 |
| தொழில் வரி | 154.73 | 120.25 | 34.48 | 77.75 |
| குடிநீர் வரி | 264.12 | 207.57 | 56.61 | 78.57 |
| வரி அல்லாத இனம் | 119.52 | 98.70 | 20.82 | 82.58 |
| காலியிடம் | 70.52 | 47.11 | 23.41 | 66.88 |
| SUC | 198.57 | 167.65 | 30.97 | 84.43 |
| மொத்தம் | 2842.52 | 2429.08 | 413.44 | 85.46 |

**சொத்து வரி சீராய்வு 2022-23**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.52 (ந.நி.4) நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்.1 நாள். 01.04.2022 ன்படி பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. அதன்படி, வரப்பெற்ற அரசாணையை நகர்மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்பட்டு நகர் மன்ற தீர்மான எண்.34 நாள்.11.04.2022 ல் பதிவு செய்யப்பட்டது.

**அதன்படி, கீழ்க்கண்டவாறு வரி சதவிகிதம் உயர்வு செய்ய தெரிவிக்கப்பட்டது.**

1.600 சதுரடி குறைவான பரப்பளவு உள்ள கட்டிடங்களுக்கு 25% விகிதம்

2.601- 1200 சதுரடி வரை உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு 50% விகிதம்.

3.1201-1800 சதுரடி வரை உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு 75% விகிதம்.

4.1800 க்கு மேல் உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு 100% விகிதம்.

5.வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு 100% விகிதம்.

6.தொழிற்சாலை, சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு 75% விகிதம்

7. காலிமனைவரி அனைத்திற்கும் 100% விகிதம் உயர்வு செய்யப்பட வேண்டும் என ஆணை இடப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருத்தி அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்விற்கு பொதுமக்களின் ஆட்சேபனை கோரி பெறப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்து பொதுமக்களின் கருத்து பெற செய்திதாள் விளம்பரம் மற்றும் மாவட்ட அரசிதழ் பிரசுரம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டதை ஏற்று நாளிதழ்களில் 13.04.2022 மற்றும் 15.04.2022 அன்று விளம்பரப்படுத்தப்பட்டு மேலும், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண் 30667/2022/ஜி1, நாள் 01.07.2022ன்படி மாவட்ட அரசிதழ் வெளியிடப்பட்டது. இந்நிலையில் அனைத்து கட்சி பிரமுகர்கள், தன்னார்வலர்கள், மன்ற உறுப்பினர்கள், விவசாய பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் சங்கம் பொது மக்கள் ஆகியோரின் ஆட்சேபனை மனுவானது 228 எண்ணிக்கை பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சொத்து வரி சீராய்விற்கான உச்ச வரம்பினை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்க அரசு அனுமதி பெற கருத்துரு அனுப்பப்பட்டு அரசு அனுமதி பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | 600 சதுரடி குறைவான பரப்பளவு உள்ள கட்டிடங்களுக்கு | 20 % |
| 2. | 601 - 1200 சதுரடி வரை உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு | 35 % |
| 3. | 1201-1800 சதுரடி வரை உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு | 50 % |
| 4. | 1800 க்கு மேல் உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு | 75 % |
| 5. | வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு | 75 % |
| 6. | தொழிற்சாலை, சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு | 50 % |

## VII. நிதிநிலைமை

**41.பொது:-**

**i) கணக்குகளின் ஆரம்ப இருப்புப் முடிவிருப்பும் பின்வருமாறு:-**

| | ஆரம்ப இருப்பு | வரவு | செலவு | முடிவிருப்பு |
|---|---|---|---|---|
| வருவாய் கணக்கு | 970.11 | 12744.38 | 11422.12 | 2292.37 |
| குடிநீர் நிதி கணக்கு | 983.70 | 5446.34 | 5831.03 | 599.01 |
| கல்வி நிதி கணக்கு | 107.19 | 46.80 | 116.89 | 37.10 |
| மொத்தம் | 2061.00 | 18237.52 | 17370.04 | 2928.48 |

**ii) மிகையாக மான்யம் பெற்றது:-**

அறிக்கையாண்டில் மிகை மானியம் இல்லை.

**42. வருவாய் ஆதாரம்**

இந்நகராட்சியில் வரி உரிமையானை கட்டணங்கள் அரசு மான்யங்கள் உதவித்தொகை குத்தகை கட்டணங்கள், அரசு கடன்கள் கேளிக்கை வரி முதலியவைகள் முக்கிய வருமானம் ஆகும். வசூலிக்கப்பட்ட தொகையில் அதிக தொகை நகர அபிவிருத்தி வேலைகளுக்கும் மற்ற இயல்பான செலவுகளுக்கும் கடன்களை திருப்பி செலுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

**அரசு மான்யம் (சாதாரணம்)**

| மான்ய விபரம் | வரவு ரூ (லட்சத்தில்) | செலவு ரூ (லட்சத்தில்) | மீதி (ரூ (லட்சத்தில்) |
|---|---|---|---|
| மாநில நிதி ஆணையம் | 2079.91 | 2079.91 | 0.00 |

**43. மூலதனச் செலவு**

1.கடன் தொகையிலிருந்து செலவிடப்பட்டது. ரூ 1114.00 இலட்சம்.

2. அரசு மான்யத்திலிருந்து ரூ 3936.38 இலட்சம்.

3. மன்ற நிதியிலிருந்து ரூ 1504.72 இலட்சம்.

**44. கடன்**

1. 1.4.2023 அன்று மொத்தம் நிலுவையாக உள்ள கடன் –ரூ 3352.08 இலட்சம்.

2. அறிக்கையாண்டில் பெறப்பட்ட கடன் ரூ 6980.00 இலட்சம்.

3. மொத்தக் கடன் - ரூ 10332.08 இலட்சம்.

4. அறிக்கையாண்டில் திரும்ப செலுத்தப்பட்ட அசல் – ரூ 158.54 இலட்சம்.

5. அறிக்கையாண்டில் இறுதியில் செலுத்தப்பட்ட வட்டி – ரூ282.06 இலட்சம்.

6. அறிக்கையாண்டில் இறுதியில் உள்ள கடன் -ரூ3311.20 இலட்சம்.

**45. முதலீடுகள்**

முதலீடுகள் கணக்கில் ஆரம்ப இருப்பு ரூ.1775.26 லட்சம். அறிக்கையாண்டில் முதலீடு செய்தது ரூ.1162.38. லட்சம். அறிக்கையாண்டில் முதலீடு திரும்ப எடுத்தது ரூ 0 இலட்சம். அறிக்கையாண்டில் முடிவிருப்பு ரூ.2937.64 லட்சம் ஆகும்.

**46. தணிக்கை**

அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் 78 தணிக்கை ஆட்சேபனை பத்திகள் நிலுவையாக இருந்தன. அறிக்கையாண்டில் 2021-2022ம் வருட ஆண்டு கணக்கு மீதான தணிக்கை 07.03.2022 தொடங்கப்பட்டு அதன் அறிக்கை நாள் 26.03.2023ல் பெறப்பட்டது. பெறப்பட்ட மூன்று நிதிகளின் மீதான அறிக்கையில் தடைப்பத்திகள் மொத்தம் 186 ஆகும். 2023-23 ஆம் நிதியாண்டில் தணிக்கை தடை கூட்டமர்வு 23.02.2023-54 மற்றும் 19.04.2023 -19 ஆக மொத்தம் -73 ஆகும். தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டது. 29.11.2022ல் மாவட்ட உயர்மட்ட நிதி கூட்டமர்வில் 44 தணிக்கை தடை நிதி நீக்கம் செய்யப்பட்டது. மொத்தம் 117 தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

| வருடம் | பொது வருவாய் மற்றும் மூலதன நிதி | குடிநீர் நிதி | கல்வி | தணிக்கை குறிப்பு | திட்டம் MUDF | நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டு நிதி |
|---|---|---|---|---|---|---|
| 2015-2016 | 2 | - | - | 6 | - | - |
| 2016-2017 | 2 | 1 | - | - | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2017-2018 | 1 | 2 | - | - | - | - |
| 2018-2019 | 5 | 1 | - | - | - | - |
| 2019-2020 | 6 | 8 | - | - | - | - |
| 2020-2021 | 22 | 7 | 1 | - | - | - |
| 2021-2022 | 136 | 14 | 1 | - | - | - |
| மொத்தம் | 174 | 33 | 2 | 6 | - | - |

அறிக்கையாண்டில் 2022-2023 ம் வருடத்திற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ.313201/- முழுவதும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு விட்டது.

**47. கடன்பாடும் பெறுமானமும்**

அறிக்கையாண்டின் இறுதியில் நகராட்சியின் பெறுமான மதிப்பு (Assets) கையிருப்புடன் ரூ.8737.3 லட்சமாகும். கொடுக்கப்பட வேண்டிய தலைப்பில் (Liabilities) நிலுவையாக உள்ள சம்பளம், பட்டியல்கள், மற்றும் மாற்றம் செய்யக்கூடிய தொகை ரூ.5435.1 லட்சமாகும்.

**48. பொது**

இந்நகராட்சியில் அரசினரால் அவ்வப்போது அமுல்படுத்தப்படும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**அ)தேசிய மகப்பேறு உதவித் திட்டம்**

2017-2018ம் ஆண்டில் இத்திட்டம் நகராட்சி பொது சுகாதாரத் துறையிலிருந்து வட்டார மருத்துவ அலுவலர் ஆரம்ப சுகாதார நிலையம் ஜமீன் கொல்லங்கொண்டானுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) ஈமச் சடங்கு மான்யம்**

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு ஈமச்சடங்கு மானியம் வழங்குவதற்காக அரசிடமிருந்து அறிக்கையாண்டில் மானியத்தொகை 150000/- பெறப்பட்டது. 29 நபர்களுக்கு 5000/- வீதம் வழங்கப்பட்டது.

**(இ) சிறுசேமிப்புத் திட்டம்**

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ஏதும் இல்லை.

**49.முடிவுரை**

மேற்கண்ட விரிவான விபரங்களின் அடிப்படையில் இராஜபாளையம் நகராட்சியில் 2023-2024ஆம் ஆண்டில் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

ஆணையாளர்,
இராஜபாளையம் நகராட்சி.